NEW TRINCO STATIONERS
இலவச ரிசீவர் –
பதிவு செய்யும் திறனுடன்
1, 3, 6, 12
மாதங்களுக்கான சன் டிரக்ட்
மேலும் அனைத்து வகையான
செய்மதி தொலைக்காட்சி சேவைகளும்


026 2223071, 077 7697184

அறைவு 01 இயம் 53 July 27 -August 02, 2013

# மலைமுரசு
# MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை – 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

# பிரேரணை கைவிடப்பட்டது

கிழக்கு மாகாணசபையின் மாதாந்த அமர்வுகளில் பட்டியலிடப்பட்டிருந்த விடயமான "13வது திருத்தச் சட்ட மூலத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தல்" என்ற பிரேரணையைக் கடைசி நேரத்தில் மீளக் கையேற்றுக்கொண்டது முஸ்லிம் காங்கிரஸ்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் குழுத்தலைவரான ஏ.எம்.ஜமீல் அவர்களால் முன்மொழியப்பட்டிருந்த அப் பிரேரணையை ஆதரிப்பது என்ற கொள்கையில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட ஏனைய எதிர்க்கட்சியினரும் தயாராகவிருந்த வேளையிலேயே அப் பிரேரணையை மாகாண சபையின் மாதாந்த நிகழச்சி நிரலிலிருந்து அகற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டிருந்தது.

அவ்வாறு கைவிடப்பட்டமைக்கான காரணம், அரசாங்கம் 13வது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதைத் தற்காலிகமாக பின்போட்டிருப்பதால் அதையொட்டியே அம் முன்மொழி வைத் தாம் மீளப்பெற்றிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

## "ஆகஸ்ட 13ல் மீளக் கொண்டு வருவோம்"

"அம்முன்மொழிவு எமது நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் கட்சித் தலைவர்களின் கலந்துரை யாடலின் போது அரசாங்கம் 13வது திருத்தத்தில் கைவைக்கும் முடிவைப் பின்போட்டுள்ளதால் மாகாணசபையில் இம்முன்மொழிவு தற்போது தேவையற்றது எனக் கருதியதால்" இம் முடிவை எடுத்ததாக ஏ.எம்.ஜமீல் தெரிவித்தார்.

எனினும் பிந்திக் கிடைத்த தகவல்களின் படி ஆகஸ்ட் 13ல் கூடவுள்ள மாகாணசபை அமர்வில் இம் முன்மொழிவு கொண்டுவரப்படும் எனத் தெரிகின்றது.

# மரண தண்டனை




தனது காதலியைக் குத்திக் கொலை செய்த குற்றத்திற்காக சந்தேகநபரைக் குற்றவாளியாகக் கண்ட நீதிவான் மரணதண்டனையை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.


உயர் நீதிமன்ற நீதிபதியினால் கடந்த புதன்கிழமை 25.07.2013 அன்று திருகோணமலை உயர் நீதிமன்ற வளாகத்திலேயே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குமரக் கடவையைப் பிறப்பிடமாகக் கொண்ட லலித் லக்ஸ்மன் குமார என்ற வாலிபருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் தனது காதலியை அவர் பணியாற்றும் பாடசாலை வளாகத்தில் வைத்து கத்தியால் குத்திக் கொலை செய்தமை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.

2007ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி மேற்கொள்ளப்பட்ட கொலைக்காக இத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

## உல்லாச விடுதி ஊழியர் கைகலப்பில் வெளிநாட்டவர் இருவர் படுகாயம்



ஊழியர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் உல்லாசப் பயணிகள் இருவர் தாக்குதலுக்குள்ளாகி வைததியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடந்தேறியுள்ளது.

உப்புவெளியில் அமைந்துள்ள இந்த இரண்டு உல்லாச விடுதிகளினதும் ஊழியர்கள் மதுவருந்திய நிலையில் தம்மிடையே முரண்பட்டுக் கொண்டுள்ளனர்.

சண்குரூஸ் உல்லாசப் பயணிகள் கப்பலில் வருகை தந்திருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இருவரும் உணவருந்துவதற்காக விடுதியொன்றைத் தெரிவு செய்ததால் எற்பட்ட முரண்பாடே பின்னர் இவ்விரு உல்லாசவிடுதி ஊழியாகளுக்கும்....

(பக்கம் 15)

# இருபுறமும் கால்களைப் போட்டுப் பயணிக்கும் சட்டம் தளர்த்தப்படும்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் மோட்டார் வாகனப் போக்குவரத்துக் காவல்துறையால் வற்புறுத்தப்பட்டிருந்த உந்துருளிகளில் இருபுறமும் பெண்கள் கால்களைப் போட்டுப் பயணிக்கும் முறையைத் தளர்த்திக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் என காவல்துறை மா அதிபர் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரிடம் உறுதியளித்துள்ளார்.

இவ்விடயத்தை கிழக்கு மாகாண சிரேட்ட பிரதிக் காவல் மா அதிபரின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற அரச அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ்.எம் சாள்ஸ் அவரிடமிருந்தே இந்த உறுதி மொழியைப் பெற்றுள்ளார்.

கிழக்கின் ஏனைய எந்த மாவட்டங்களிலும் அமுலாக்கப்படாத இந் நடவடிக்கையானது, மட்டக்களப்பில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்தே கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உந்துருளிகளின் பின்னாலிருந்து செல்பவர்களின் பாதுகாப்பை முழு நோக்கமாகக் கொண்டிருந்த இந் நடவடிக்கையானது முக்கியமாகச் சேலையணிந்து செல்லும் பெண்களுக்கு பெரும் இடர்பாடுகளை உருவாக்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு இருபுறமும் கால்களை இட்டுச் செல்லாதவர்களுக்கு எதிராகக் காவல்துறை நடவடிக்கைகளை எடுக்க முனைந்ததையும் அவ்வாறு இருபுறமும் கால்களை இட்டுச் செல்வதால் ஏற்படும் இடர்களை விளக்கியும் காவல்துறை மா அதிபரிடம் கலந்துரையாடிய அரச அதிபரின் முயற்சியால் இம் முடிவை மாற்றிக்கொள்வதற்கு காவல்துறையினர் இணங்கியுள்ளனர்.



(அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம் சாள்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 - 0777555738

## வணக்கம்

### வாழ்வே போராக....!

காலம் முப்பது ஆண்டுகளை உருட்டி விட்டது. கறுப்பு ஜுலை 25ம் திகதி.... இலங்கையின் ஒரு இனத்தின் மீதான கருவறுப்பு வன்முறைகள் தொடங்கி மூன்று தசாப்தங்கள் முடிவடைந்துள்ளது.

ஆனால் அம் முப்பதாவது ஆண்டின் முடிவிலும் மற்றோர் தடவை போர் முகம் கொண்ட அந்த இனம் போரின் பெயரால் அழிக்கபட்டே முடிவுற்றுள்ளது.

ஆயுதப் போர் முடிவடைந்த பின்னும் எம் இனம் சந்திக்கும் வாழ்வுக்கான போர் முடிந்தாகவில்லை. அண்மையில் மூதூர் பாரதிபுரம் கிராமத்தின் செய்திகளைக் கேட்க முடிந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட விதவைகளைத் தாங்கி நிற்கின்றது அந்தக் கிராமம். சுமார் 10 குழந்தைகளுக்குத் தாயோ தகப்பனோ உயிருடன் இல்லை. அவர்கள் கல்வி கற்றுக்கொண்டு இருக்கின்றார்கள். வயதான பேத்தியுடன் வாழும் அவர்களின் கல்விக்காக அவர்கள் தமது போராட்டத்தைப் பசிதாங்கும் வயிற்றுடன் முன்னெடுத்துச் செல்கின்றார்கள்.

அவ்விதவைத் தாய்மார்கள் தமக்கான வாழ்வாதாரத்தைத் தேடி காடு மலையெங்கும் பயணிக்கின்றார்கள். கண்முன்னே வாழ்வதற்கான போரைப் பார்த்துக்கொண்டு வாழ்கின்றோம் நாம்.

போரின் போதான எமது சிந்தனைகளுக்கும் போரின்பின்னரான எமது சிந்தனைகளுக்கும் இடையே பெரும் இடைவெளியொன்று இருப்பதை நாம் யாவரும் அறிகின்றோம்.

இக் கணத்தில் ரஸ்யாவில், ஜப்பானில், சீனாவில் போருக்குப் பின்னரான கிராமக் கட்டுமானப் பணிகளில் அந்நாட்டு அரசுகள் எவ்வாறு ஈடுபட்டிருந்தன என்பதை நாம் பாடமாகக் கொள்ளலாம்.

கிராமக்குழுக்களை அமைத்து அந்நாட்டின் அரசுகள் மிகவேகமாகத் தமது கிராமக் கட்டுமானங்களை விருத்தி செய்திருந்தன.

அதை எமது மண்ணில் செய்ய முடியாதா? உடனடியாக எமது அரசியல் தலைவர்கள் சொல்வது எம்மிடம் அரசு இல்லை என்று.... நொண்டிச் சாட்டு....

கிராமங்களில் மக்களை ஒற்றுமைப்படுத்தி சிறிய முதலீடுகளுடன் கிராமக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு எவருக்கும் அரசு தேவையில்லை. அதற்கான வலுவை எமது அரசியல் தலைவர்களுக்கு மக்கள் தந்திருக்கின்றார்கள்... அவர்கள் தமது நிதியிலிருந்து கிராமங்களிலுள்ள கோயில்களுக்கு நிதியை வழங்க முன்நிற்பது தெரிகின்றது.

"திவிநெகும" திட்டத்தின் நோக்கமென்ன...? கிராமங்களிலுள்ள மக்களை குறிவைத்து ஒற்றுமைப்படுத்தித் தமது அரசியல் தேவைக்காகப் பயன்படுத்த முயற்சிப்போரிடையே அவர்களைக் கொண்டு அவர்களுக்குத் தேவையானவற்றை உருவாக்கும் செயற்றிட்டம் எம்மிடமில்லை என்பது தான் உண்மை.

ஆண்டுகள் 30 தாண்டியும் நினைவுகள் மட்டுமே எம்மிடம் எஞ்சிக் கிடக்கின்றன என்றால்.. ... அடுத்தவருடம் 31 என்று எண்ணுவோம் வாருங்கள்......

## கூனித்தீவில் குடியேற்றப்பட்ட மக்களுக்குக் கட்டடப் பொருட்கள்

கூனித்தீவில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு ஒரு தொகுதி கட்டிடப் பொருட்களை மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் வழங்கியுள்ளார்.

21.07.2013 அன்று கூனித்தீவிற்குப் பயணமான அவர் அங்குள்ள 89 குடும்பங்களுக்கும் நவரட்ணபுரத்தில குடியேற்றப்பட்ட 137 குடும்பங்களுக்கும் இப் பொருட்களை வழங்கினார்.

இக் கட்டிடப் பொருட்களின் தொகுதியானது குடும்பமொன்றிற்கு 8 சீமெந்துப் பக்சற்றுக்களையும், 12 கூரைத்தகடுகளையும் கொண்டமைந்திருந்தன.

இந்நிகழ்வு கூனித்தீவு நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்ற போது அமைச்சருடன், கிழக்கின் தவிசாளர் ஆரியவதி கலப்பதி அவர்களும் மாவட்ட அரசாங்க அதிபர் ரஞ்சித் சில்வா அவர்களும் கலந்து கொண்டனர்.



## பிரதேச சபைத்தலைவர் நீதிமன்றில்...

குமரக்கடவையின் (கோமரங்கடவல) பிரதேசசபைத் தலைவரான சந்தன விஸித் குமார கடமையிலிருந்த காவல்துறையினருக்கு இடையூறு விளைவித்ததால் நீதிமன்றில் நிறுத்தப்பட்டள்ளார்.

23ம் திகதி கடமையிலிருந்த காவல்துறையினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் காவல்துறையினர் மீது தகாத வார்த்தைகளையும் பிரயோகித்ததாக அவருக்கெதிராக காவல்துறையால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதைத்தொடர்ந்து அவரைக் கைது செய்யும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதை அறிந்த அவர் நீதிமன்றில் சரணடைந்ததைத் தொடர்ந்து அவ்வழக்கு புரட்டாதி மாதம் 26ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 12 மில்லியன் செலவில் மைதானங்கள் புனரமைப்பு...

சுமார் 12 மில்லியன் ரூபா செலவில் தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள ஹமீதியா மற்றும் கல்மெட்டியாவ தெற்கு ஆகிய இடங்களில் உள்ள இரு முக்கிய பொது விளையாட்டு மைதானங்களும் புனரமைக்கப்படவுள்ளதாக தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எம்.சுபியான் தம்பலகாமம் பிரதேச சபையில் வியாழக்கிழமை இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

## மூதூரில் கடினப் பந்து அணி

மூதூர் தக்வா நகர் பிரதேசத்தில் மர்ஹூம் அப்துல் குத்தூஸ் பரீத் என்பவரின் தலைமையின் கீழ் 1994ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஈராக் விளையாட்டுக் கழகம் அன்றிலிருந்து இன்றுவரை பல்வேறு தலைமைத்துவத்தின் கீழ் மென்பந்து கிரிக்கட் போட்டிகளில் பல கிண்ணங்களை சுவீகரித்துள்ளது.

அதன் வளர்ச்சிக் கட்டமாக இவ் விளையாட்டுக்கழகத்தின் ஆயுட்காலத் தலைவர் நூர் முகமதுஅப்துல் காதர், விளையாட்டு அணித்தலைவர் அப்துல் மஜீது இர்ஷாத் மற்றும் கழக விளையாட்டு வீரர்களினதும் ஒத்துழைப்புடனும் உறுப்பினர்களின் ஒத்துழைப்புடனும்



தற்போது 20.7.2013 அன்று கடினபந்து (Hard Ball) அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது

(ஜவாஹிர்)

## மட்டக்களப்பு முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவானது

மட்டக்களப்பு முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்வதற்கான வருடாந்த பொதுக்கூட்டம் மட்டக்களப்பு வேதநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர உத்தியோகத்தர், மட்டக்களப்பு போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, கிழக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர், மற்றும் சாரதிகள் பலர் கலந்து கொண்டனர். இங்கு தரம் ஒன்றில் கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்பட்ட முச்சக்கர வண்டி சாரதிகளின் பிள்ளைகளுக்கு வங்கிக் கணக்குப் புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு முச்சக்கர வண்டி சாரதிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இச்சங்கத்தின் தலைவராக இராஜேந்திரன் ரெட்ணராஜா, உபதலைவர் ராசநாயகம், செயலாளர் மாணிக்கம் சிவலிங்கம், உபசெயலாளர் கந்தையா சந்திரசேகரம், பொருளாளர் தியாகராஜா சிறிபாலன், ஆலோசகராக முன்னாள் சங்க செயலாளர் மகேந்திரராஜா கோகுலராஜ் மற்றும் நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலடி நீச்சலுக்கு வந்த வெளிநாட்டுப் பெண் மீது பாலியல் வல்லுறவு



திருகோணமலை குச்சவெளியிலுள்ள பிரபல்யமான கடலடி நீச்சல் (Diving) உல்லாச விடுதியொன்றில் வெளி நாட்டுப் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளனதாக தகவல்கள் கசிந்துள்ளன.

குறித்த பெண் கடலடி நீச்சலை முடித்துவிட்டு உல்லாச விடுதிக்கு உணவு அருந்துவதற்காக வந்திருந்த போது அவருக்கு வழங்கப்பட்ட குளிர்பானத்தில் போதைப் பொருள் கலக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் மயக்கமான நிலையில் அப் பெண் இருந்த போதே அவர் மீது பாலியல் வல்லுறவுக் குற்றம் நிகழ்த்தப் பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

மயக்கம் தெளிந்த நிலையில் தனக்கு நிகழ்ந்த வன்முறையைப் புரிந்து கொண்ட அப்பெண் விடயத்தைக் காவல்துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து இக் குற்றம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்.

### கிழக்கில் முதல் தடவையாக

## அகண்ட நாம ஹோமம்

அகண்ட நாம ஜெய காயத்ரி ஹோமம் ஒன்று கிழக்கில் முதல் தடவையாக நடைபெற்று வருகின்றது.

ஆரையம்பதி கண்ணகை அம்மன் ஆலயத்திலேயே இம் மாபெரும் யாகம் நேற்று ஆரம்பமானது. ஆரையம்பதி மதங்க மாதங்கி ஆசிரமத்தின் சுவாமிகள் கிருஸ்ண மங்களம் அவர்களால் இவ் யாகம் நடாத்தப்பட்டு வருகின்றது. மக்களின் பல்வேறு துன்ப துயரங்களை நிறைவேற்றத் தக்கதான இவ் யாகமானது தொடர்ந்து 3 நாட்களுக்கு நடைபெற்று 28 ம் திகதி பிற்பகல் பூரணாகதியுடன் நிறைவுறும் என சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் தேர்வான ஒரே மாணவி பாத்திமா நிபாசத்



## ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில்

ஆசிய பசுபிக் மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பிய முகம்மட் லாபிர் பாத்திமா நிபாசத் என்னும் மாணவிக்கு அம் மாணவியின் பாடசாலையில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் புகாகோ நகரத்தில் இவ்வருடம் ஜுலை மாதம் 14ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை நடைபெற்ற அம்மாநாட்டில் கிழக்கிலிருந்து தேர்வான ஒரே மாணவியான நிபாசத் காத்தான்குடி மீரா பாலிகா மகாவித்தியாலய மாணவி என்பது குறிப்பிடத் தக்கது.

அவரது பாடசாலையில் 24ம் திகதி அவருக்கான வரவேற்புபசாரம் அப் பாடசாலையின் அதிபர் எம்.எம்.இஸ்மாலெப்பை தலைமையில் நிகழ்ந்தது. இவ் வரவேற்புபசாரத்தின்போது அவருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் கோட்டக் கல்வி அலுவலர், பள்ளிவாயல்கள் நிறுவனத் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வருடாந்தம் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய சித்திகளைப் பெறும் மாணவர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்ளும் புலமைப் பரிசிலையும் பெறுவர்.

அதன்படி இவ்வருடம் கிழக்கிலிருந்து மாணவி பாத்திமா நிபாசத் மற்றும் வடக்கிலிருந்து யாழ் இந்துக் கல்லூரி மாணவன் பாலேந்திரன் அபிராம் உட்பட மேலும் நான்கு சிங்கள மாணவர்களும் இம் மாநாட்டில் கலந்திருந்தனர்.

## நவுறுதீவில் கலவரம் — 150பேர் கைது

புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து வைத்திருந்த நவுறு தீவில் கலவரம் வெடித்துள்ளது. தமது கட்டடங்களை தகர்த்தும், தீவைத்தும் அங்கிருந்த தப்பியோட முனைந்த புகலிடக் கோரிக்கையாளர்களால் இக்கலவரம் வெடித்துள்ளது. அதனால் இலங்கைத் தமிழர்கள் உட்பட சுமார் 150பேரை காவல்துறை கைது செய்துள்ளது.

## விக்னேஸ்வரனால் நாடு பிளவுபடும் அபாயம் — பொதுபலசேனா

இந்திய அழுத்தத்தாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சா வேட்பாளராகக் களமிறக்கியுள்ளது. இதனால் நாடு பிளவுபடும் அபாயம் உள்ளது என பொதுபலசேனா தெரிவித்துள்ளது.

## பள்ளிவாயல் தாக்குதல்களால் இனப் பகைமை ஏற்படும் — ஹக்கீம்

ரமழான் புனித மாதத்தில் மஹியங்கனைப் பள்ளிவாயல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமானது இனங்களிடையே பகைமையையும் விரிசலையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என நீதி அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பைப் பிளவுபட விடமாட்டேன் — மாவை

கூட்டமைப்பிற்குள் பிளவோ போட்டியோ ஏற்பட அனுமதிக்க மாட்டேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். தலைமையின் முடிவை நாம் பூரணமாக வரவேற்பவர்கள் என்பதை அனைவருக்கும் உணர்த்த வேண்டும். ஆற்றலுள்ள முதலமைச்சர் வேட்பாளரைத் தலைமை நிறுத்தியுள்ள போது அம்முடிவின் பின் நாம் அணி திரள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## சீமானைக் கைது செய்ய உத்தரவு:

இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசிய குற்றச்சாட்டில் பிணையிலுள்ள சீமான் தவணையொன்றுக்கு நேரில் வருகை தராததால் அவரைக் கைது செய்யும் உத்தரவு இடப்பட்டுள்ளது.

# மாகாண சபையை ஒழிக்கும் முயற்சியைக் கடுமையாக எதிர்ப்போம்

### கிழக்கின் அமைச்சரவைப் பேச்சாளர் — அமைச்சர் உதுமாலெப்பை

"மாகாண சபை முறைமையை ஒழிக்கும் அல்லது வலுவிறக்கும் எந்தவொரு திருத்தச் சட்ட மூலத்திற்கும் தாம் ஆதரவளிக்கப் போவதில்லை" என கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்பாசன அமைச்சரும் கிழக்கு மாகாண அமைச்சரவைப் பேச்சாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை எதிர்த்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினரும், கிழக்கு மாகாண சபையின் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீலினால் பிரேரணை யொன்று சபையில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. அப் பிரேரணை தொடர்பில் அமைச்சர் தனது கருத்தினை வெளியிட்டார். மேலும் அவர் தெரிவிக்கையில் ,

"மாகாண சபை ஆட்சி முறையில் வலுவிறக்கம் செய்யப்படவோ அல்லது, மாகாண சபை முறைமையை ஒழிக்கவோ தாம் ஒரு போதும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் நடவடிக்கைக்கும் தாம் ஒரு போதும் இணக்கம் தெரிவிக்கப் போவதில்லை.

தாம் அரசாங்கத்தின் பங்காளி கட்சி என்பதற்காக அரசாங்கம் கொண்டுவரும் எல்லா விடயங்களுக்கும் ஆதரவு வழங்க வேண்டும் எனும் கடப்பாடு எமக்கில்லை.

இதற்கு நல்ல உதாரணமாக கடந்த கிழக்கு மாகாண சபை ஆட்சிக் காலத்தின் போது அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட நாடு நகர சட்ட மூலத்திற்கு தமது எதிர்ப்பினை தெரிவித்திருந்தமையினை இங்கு நினைவு படுத்த விரும்புகின்றேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்காக கொண்டு வரப்பட்ட மாகாண சபை ஆட்சி முறைமை இன்னும் இந்த மாகாணங்களில் முறையாக அமுல் படுத்தப்படாத நிலையிலையே இருந்து வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் அதனை குறைப்பதற்கும், இல்லாமல் செய்வதற்கும் நாம் ஒரு போதும் ஆதரவு வழங்கப்போவதில்லை.

யுத்தத்தினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் அதிகளவில் பாதிக்கப்பட்ட மக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களேயாகும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் மூலம் இன்று கிழக்கில் அடிப்படை வசதிகள், உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகள் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக இம்மாகாணததில் மூவின சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்காக அரும்பாடுபட்டு அதனை கட்டியெழுப்பி வருகின்றோம். [illegible] சபையினை [illegible] வலுவைக் குறைப்பதற்கு ஆதரவை நாம் தெரிவிக்க மாட்டோம் " என்றார்.



## பொதுநலவாய மாநாட்டின் பின்னரே 13வது சட்டத்தில் திருத்தம்.

மாகாணசபைகளின் காவல்துறை மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகார நீக்கம் பொதுநலவாய உச்சி [illegible]ரேயே நிகழும் என அரச [illegible]மட்டத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் மூலோபாயத்தைக் கேள்விக்குள்ளாக்கிய விக்னேஸ்வரன்

சஞ்சயன்


வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை முன்னிறுத்த எடுத்த முடிவு, வடக்குத் தேர்தல் குறித்த அரச தரப்பின் மூலோபாயத்தை மாற்றியமைத்து விட்டது என்றே கூறலாம்.

இந்த மூலோபாய மாற்றம் என்பது, தனியே வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கானதாக மட்டும் இருக்குமா அல்லது அதற்கு அப்பாலும் செல்லுமா என்ற கேள்வியையும் கூடவே இது எழுப்பி விட்டுள்ளது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறும் அரசியல் நகர்வாக மட்டுமே கையாளும் என்ற அரசின் எதிர்பார்ப்பு, சி.வி.விக்னேஸ்வரன் களத்தில் இறக்கப்பட்டதும், உடைக்கப்பட்டு விட்டது.

இந்தக் காய்நகர்த்தல் என்பது, வெறுமனே வடக்கு மாகாணசபையைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தல் என்ற சாதாரண அரசியல் மூலோபாயத்துக்கு அப்பாற்பட்டது. இந்த யதார்த்தத்தை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளதாகவே தெரிகிறது.

சி.வி.விக்னேஸ்வரன் களத்தில் இறக்கப்பட்டதும், நிகழ்ந்த முக்கியமானதொரு மாற்றம், அரச தரப்பின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுங்கிக் கொண்டதைக் குறிப்பிடலாம். இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை, அரசதரப்பு அதிகாரபூர்வ வேட்பாளர் பட்டியல் வெளியாகவும் இல்லை, டக்ளஸ் தேவானந்தா போட்டியில் இருந்து ஒதுங்குவதாக அறிவிக்கவும் இல்லை. ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறமாட்டார் என்றே தகவல்கள் கூறுகின்றன.



ஆனால் அவர் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில், ஊடகங்களுக்கு அளித்த பேட்டிகளில், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தான் முதல்வர் பதவிக்காகப் போட்டியிடுவேன் என்றும், அதற்காக அமைச்சர் பதவியை இழக்கவும் தயார் என்றும் கூறியிருந்தார். எனவே, தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தான் போட்டியிடத் திட்டமிட்டிருக்கவேயில்லை என்று அவரால் ஒருபோதும் பல்டி அடிக்க முடியாது. அதேவேளை, சில நாட்களுக்கு முன்னர் பிபிசிக்கு அளித்துள்ள பேட்டியில் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளும்கட்சி வெற்றி பெற்றால், முதல்வர் பதவிக்கு யாரை நியமிப்பது என்று தானே முடிவெடுப்பேன் என்றும் அவர் கூறியுள்ளார். இதில் அவர், தானே முதல்வராவேன் என்று அவர் வலிந்து கூறவில்லை.

இப்போதைய சட்டங்களின்படி, மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமல், வெளியில் இருந்து ஒருவரை முதல்வராக நியமிக்க முடியாது. ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் விக்னேஸ் வரன் உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வினால் அளிக்கப்பட்ட தீர்ப்பு இதற்குத் தடை விதித்துள்ளது. இந்த நிலையில், வெளியில் இருந்து ஒருவரை முதல்வராக நியமிக்க வழி செய்யும் வகையில், மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை திருத்தியமைக்கும், அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்துள்ள தாகவும் தகவல்கள் உள்ளன.

இவையெல்லாம், வடக்கு மாகாண முதல்வர் பதவி மீது அவருக்கு கண் இருந்தாலும் கூட, போட்டியில் குதிக்கும் எண்ணம் இல்லை என்பதையே காட்டுகின்றன.

அதேவேளை, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, வடக்கில் மட்டுமன்றி, ஏனைய இரண்டு மாகாணங்களிலும் கூட, முதல்வர் வேட்பாளராக எவரையும் முன்னிறுத்தாமலேயே போட்டியை எதிர்கொள்ளப் போகிறது.

எவ்வாறாயினும், அரசதரப்பு ஏனைய மாகாணங்களில் முதல்வர் பதவிக்கான வேட்பாளராக எவரையும் முன்னிறுத்தாது போனாலும், அத்தகைய வழக்கத்தை முன்னரும் கடைப்பிடித்திருந்தாலும், வடக்கு மாகாணசபையில் அத்தகைய மூலோபாயத்தைக் கடைப்பிடிக்கத் திட்டமிட்டிருக்கவில்லை.

ஏனென்றால், முன்னர் பல சந்தர்ப்பங்களில், அரச தரப்பின் முதல்வர் பதவிக்கான வேட்பாளராக, கே.பி முன்னிறுத் தப்படலாம் என்று செய்திகள் வெளியிடப்பட்டன. பின்னர், தயா மாஸ்டர் நிறுத்தப்படலாம் என்று தகவல்கள் கசிய விடப்பட்டன. இல்லை, டக்ளஸ் தேவானந்தாவே போட்டியிடுவார் என்றும் கூறப்பட்டது. இவர்களை விட வேறும் சிலரின் பெயர்களும் அடிபட்டன.

இத்தகைய செய்திகள் வெளியாகிய போதெல்லாம், ஆளும்கட்சி அதை ஒருபோதும் நிராகரிக்கவில்லை. எல்லாவற்றையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான ஓர் உளவியல் போராகவே இது நடத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்தவும், வடக்கிலுள்ள வாக்காளர்களைக் குழப்பி விடவும், அரசதரப்பே இத்தகைய செய்திகளை ஊக்குவித்தது. ஆனால், இப்போது திடீரென, யாரையுமே முதல்வர் பதவிக்கு முன்னிறுத்தப் போவதில்லை என்று அரசதரப்புக் கூறுகிறது.

இது, ஏற்கனவே முதல்வர்



எடுதது வைதத அடியை, சறறு பின்னே எடுத்து வைத்துள்ளது என்றே அர்த்தம். அரசதரப்பு, இவ்வாறு பின்வாங்கிக் கொண்டதற்கு முக்கிய காரணம் ஒன்று உள்ளது.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசியல் களத்துக்கு வெளியில் இருந்து, முன்னாள் நீதியரசரை முதன்மை வேட்பாளராக தெரிவு செய்தபோது, அவருக்கு இணையான - ஈடுகொடுக்க கூடிய ஒரு முதன்மை வேட்பாளரை அரசதரப்பினால் நிறுத்த முடியாது போயுள்ளது.

அரசியல் அனுபவங்களுக்கு அப்பால், சமூகத்திலும் அரசியலிலும், சர்வதேச அளவிலும், செல்வாக்குப் பெற்ற ஒருவருடன், அவருக்கு நிகரானதொரு பிரமுகரை நிறுத்தாது போனால், அந்தத் தேர்தல் களையிழந்து விடும். அதனால் தான், முதன்மை வேட்பாளராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நிற்பதற்குத் தயங்குவதுடன், ஆளும்கட்சி எந்தவொரு முதன்மை வேட்பாளரையும் நிறுத்தவும் பின்நிற்கிறது.

முதல்வர் பதவிக்கான வேட்பாளர் என்று பலரை அறிமுகப்படுத்தி விட்டு, கடைசியில், ஒருவரையும் அத்தகைய முகத்துடன் போட்டியிட வைக்க முடியாமல் போனதால், வடக்குத் தேர்தல் தொடர்பான அரசின் முக்கியமானதொரு தந்திரோபாயம் தோல்வி கண்டுவிட்டது என்றே கூறலாம். இதனால் தான், கனதியானதொரு முதன்மை வேட்பாளரை முன்னிறுத்தும் அரசியல் மூலோபாயத்தை அரசதரப்பு மாற்றியமைத்துக் கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சரி, வடக்கு மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதுடன், அரசதரப்புக்கு இந்த மூலோபாய நெருக்கடி தீர்ந்து விடுமா என்றால், அதுவும் கிடையாது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில், தாம் தோற்றுப் போவதற்காகப் போட்டியிடவில்லை என்று அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்த் குறிப்பிட்டிருந்தாலும் கூட, இந்தத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் அரசதரப்பு ஆட்சியைப் பிடிக்கும் என்று நம்புவோர் மிகமிகக் குறைவு.

அரச தரப்பினருக்கே இந்த நம்பிக்கையில்லாத போது, சாதாரண மக்களின் நிலை என்னவென்று புரிந்து கொள்வது ஒன்றும் கடினமான வேலையல்ல.

வடக்கு மாகாண முதல்வராக, முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், பொறுப்பேற்கும் நிலை ஏற்படுமானால், அரசாங்கத்தின் அடுத்த அரசியல் தந்திரோபாயமும் கேள்விக்குள்ளாகும்.

விக்னேஸ்வரனை முதன்மை வேட்பாளராக அறிவித்த போது, அதுபற்றிக் கருத்து வெளியிட்ட அமைச்சர் பசில் ராஜபக்ச, இதனால், வடக்கிலுள்ள மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்காது என்று குறிப்பிட்டிருந்தார். அவர் அவ்வாறு குறிப்பிட்டதன் அர்த்தம், விக்னேஸ்வரன் முதல்வர் பதவிக்கு ஆளுமையற்றவர் என்ற கருத்தின் அடிப்படையிலன்று. எல்லா அதிகாரங்களும் மத்திய அரசின் வசம் உள்ள நிலையில், இவரால் எதைச் செய்து கிழிக்க முடியும் என்ற அகந்தையான கருத்தாகவே அதைக் கருதலாம்.

அதாவது, வடக்கில், விக்னேஸ்வரன் முதல்வரானாலும் சரி, வேறு ஒருவர் அந்தப் பதவிக்கு வந்தாலும் சரி, அவரை ஆட்டி வைக்கும் அதிகாரம் தம்மிடமே உள்ளது என்றே அரசாங்கம் கருதுகிறது. 13ஆவது திருத்தச்சட்டம் மாகாணசபைகளுக்கு எந்த அதிகாரங்களையும் வழங்கவில்லை என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தாலும் கூட, தேர்தலின் பின்னர், அவருடன் அரசாங்கம் அதிகளவில் முரண்போக்கை வெளிப்படுத்த முடியாது.

ஏனென்றால், அத்தகைய முரண்போக்கு, நியாயமானதொரு தீர்வை விரும்பும் சிங்கள மக்களையும், சர்வதேச சமூகத்தையும், அரசாங்கத்தை வெறுப்புடன் பார்க்க வைக்கும்.

என்னதான், சம்பிக்க ரணவக்க அவரை, அன்டன் பாலசிங்கத்தின் மறுவடிவம் என்றாலும், விமல் வீரவன்ச அவரை, பிரபாகரனால் முடியாது போனதை, நிறைவேற்ற அழைத்து வரப்பட்டவர் என்றாலும், தனிநாடு கோரும் போராட்டத்துக்கு உயிர் கொடுக்க வந்துள்ளவர் என்று சிங்களத் தேசியவாத அமைப்புகள் குறிப்பிட்டாலும், இவை எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவர் அவர், என்ற உண்மை சிங்கள மக்களிலும் கணிசமானோருக்குத் தெரிந்தேயிருக்கும்.

இது, அவருடன் எதிர்காலத்தில் முரண்போக்கை வலிந்து உருவாக்க முற்பட்டால், அரசின் மீதான வெறுப்பையே தோற்றுவிக்கும். இத்தகைய நிர்ப்பந்தம் ஒன்று உருவாகும் நிலை தோன்றினால், என்பதைவிட அதற்கான அறிகுறிகள் தென்பட்டாலேயே, அரசாங்கத்தின் அடுத்தடுத்த மூலோபாயங்கள் கேள்விக்குள்ளாகும்.

எனவே, சி.வி.விக்னேஸ்வரனின் அரசியல் பிரவேசத்தை, தனியே வடக்கு அரசியல் களத்தில் ஏற்படும் மாற்றமாக மட்டும் கருத முடியவில்லை. அதற்கும் அப்பால், தேசிய அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாக இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதை நிராகரிக்க முடியாது.

(நன்றி : தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமுரசு

# "13 இராணுவ முகாம்கள் இடமாற்றம்"

யாழ்ப்பாணம் வலிகாமத்திலுள்ள 13 இராணுவ முகாம்களை இடமாற்றம் செய்யப்போவதாக இராணுவம் அறிவித்துள்ளது.

சிறிய இராணுவ முகாம்களான இவற்றை மூடி பலாலி இராணுவத் தளத்துடன் இணைக்கும் முடிவே எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இராணுவப் பிரசன்னத்தை யாழ்ப்பாணத்தில் குறைக்கும் முகமாக படையணிகளை இலங்கையின் ஏனைய பாகங்களுக்கு மாற்றும் முடிவையும் இராணுவம் மேற்கொண்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வணிகசுந்தர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய யாழப்பாணத்திலிருந்து ஹம்பாந்தோட்டை, கொழும்பு மற்றும் கண்டிப் பகுதிக்கு படையணிகள் மாற்றப்படவுள்ளன.

## இந்தியத் தலையீட்டால் இலங்கை பின்வாங்கியது:

அரசியலமைப்பில் திருத்தத்தை மேற்கொள்ளும் முயற்சியை அரசு அரை வருடங்களுக்குப் பிற்போட்டுள்ளது. இதற்குக் காரணம் இந்தியத் தலையீடே.

வடக்கின் தேர்தலுக்கு முன் 13வது திருத்தத்தில் மாற்றங்களைச் செய்ய வேண்டாம் என விரும்பிய அரசிற்கு இந்தியாவின் தூதராக வந்த மேனன் வைத்த ஆப்பால் அத் திட்டத்தைத் தற்காலிகமாக அரசு பின்தள்ளி விட்டுள்ளது.

## மாகாணத் தேர்தலை முன்னிட்டு மோப்ப நாய்கள் தயாராகின்றன.

மாகாணசபைத் தேர்தலில் வெடிப் பொருட்களைக் கண்டு பிடிக்கும் பொருட்டு பயிற்றப்பட்ட 35 மோப்ப நாய்களை காவல்துறை பணியில் ஈடுபடுத்தவுள்ளது.

## பொதுபலசேனாவும் சர்வதேச வலையமைப்பைக் கட்டியெழுப்புகின்றது:

தமது இனவாதக் கொள்கைகளைச் சர்வதேச அளவில் விரிவுபடுத்தும் நோக்கில் பொ.ப.சே சர்வதேசக் கட்டமைப்பினை உருவாக்கும் முயற்சியைத் தொடங்கியுள்ளது. இவ்வலையமைப்பில் ஆரம்பத்தில் பிரிட்டன், அவுஸ்திரேலியா, இத்தாலி, பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளிலேயே கிளைக்காரியாலயங்கள் உருவாகவுள்ளன.

## கூட்டுச் சேரும் முஸ்லிம் காங்கிரஸ்:

வடமாகாண சபைத் தேர்தலில் அரசினால் கைகழுவி விடப்பட்ட மு.கா முதலில் தனித்துப் போட்டியீடும் முடிவில் இருந்தது. தற்போது அம் முடிவை மாற்றி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உடன் கூட்டுச்சேரும் முயற்சியில் இறங்கியுள்ளது.

# "எனக்குத் தெரியாதே என் மனைவி பயணித்தது"



" எனது மனைவியும் மகனும் பயணித்தது எனக் குத் தெரியாது" எனக் கதறினார் படகு விபத்தில் பலியான குழந்தையின் தந்தை நடராசா பாலரமணன்.

புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற படகொன்ற ஜாவாத் தீவகளின் கரைக்கப்பால் கடலில் மூழ்கியபோது பலியான மூன்ற வயதுச் சிறுவனின் தந்தையே இவ்வாறு ஏபிசி நிறுவனச் செய்திச் சேவைக்குச் செவ்வியளித்துள்ளார்.

இப்படகு விபத்தில் 189பேர் காப்பாற்றப்பட்டுள்ள போதும் 13பேர் மரணமாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

2009ம் ஆண்டில் இலங்கையிலிருந்து தப்பிச் சென்ற நடராசா பாலரமணன் அவுஸ்திரேலியாவில் தொழிலாளியாகப் பணியாற்றி வருகின்றார். அவருக்கு வழங்கப்பட்டிருந்த வதிவிட அனுமதியைக் கொண்டு தனது குடும்பத்தை அந்நாட்டிற்கு அழைத்துக்கொள்வதற்காக அவர் மேற்கொண்ட முயற்சி தடைப்பட்டுப் போன பின்னரே அவரது மனைவி இக் கடல் பயணத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

படகு கடலில் மூழ்கத் தொடங்கிய போதே அவரத மனைவி கணவனுக்கு கையடக்கத் தொலைபேசி ஊடாக தானும், மகனும் அப்படகில் இரப்பதை அறிவித்துள்ளார். எனினும் அவர் எங்கிருக்கின்றார் என்பதை அறிவிக்கவில்லை.

தற்போது வரை அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தெரிய வில்லை என பாலரமணனின் நண்பர் தெரிவித்துள்ளார். ஆனால் 25.7.2013 அன்று அவரது மனைவி தொடர்பு கொண்டு தான் மட்டுமே உயிருடன் கரை சேர்ந்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். என்றாலும் அம்மனைவிக்கும் தாம் எங்கே கரைசேர்க்கப்பட்டுள்ளோம் என்பது தெரியவில்லை. அதன்பின்னர் மனைவியுடனான தொடர்புகளை தனது நண்பன் இழந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனைவியின் இருப்பிடத்தை அறிந்துகொள்வதற்காகத் தற்போது பாலரமணன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பழங்குடி நம்பிக்கை

நாடு, இனம், சமயம், குலம் போன்றவைகளுக்கு வெவ்வேறான சம்பிரதாயம், கலாச்சாரம், பழக்கவழக்கம் ஆகியன உள்ளதென எம் அனைவருக்கும் தெரியும்.

சில வேளைகளில் அந்த நடைமுறைகள் எமக்கு ஆச்சரியத்தையும் தரும். அந்த நடைமுறைகள் மூலம் இடம்பெறும் சம்பவங்கள் நாட்டுக்கு நாடு வித்தியாசமாக இருந்தாலும் அந்த நாட்டினுடைய சம்பிரதாயம், கலாசாரம், பழக்கவழக்கம் ஆகியவற்றை விமர்சிப்பதற்கு எமக்கு உரித்தில்லை.

நமது நாட்டில் கூட மகியங்கனைப் பகுதியில் வேடர்கள் இன்னும் வாழ்ந்து கொண்ட இருக்கின்றனர். ஆனால் அவர்கள் தத்தமது பழக்க வழக்கங்களை அடியோடு மாற்றிக் கொள்ளவில்லை.

எமது அரசாங்கம் கூட அவர்களை எனும் பிரதேச வாசிகளிடம் ஒரு கௌரவிக்கின்றது.

அவர்களை "வேடர்" என்று அழைக்காது "ஆதிவாசிகள்" என்று அழைக்கும்படி மக்களை அரசாங்கம் கேட்டுள்ளது. ஒரு சில வசதிகளை முன்னிட்டும் நாடு நாகரீகம் அடைந்ததை முன்னிட்டும் அவர்கள் மத்தியில் உடை, நடைகளில் சில சில மாற்றங்களை காணக்கூடிய தாகவுள்ளது.

ஆனால் அவர்களை தங்களது குலத்திற்குரிய பூர்வீக நடவடிக்கைகளை அடியோடு மாற்றிக் கொள்ளவில்லை.



புதுமையான கலாச்சாரங்கள் இன்னும் இருந்து கொண்டே வருகின்றன. அதாவது தங்கள் குடும்பத்தில் காலம் சென்ற பாட்டன் கனவில் வந்து கூறும் விடயங்களை தம் வாழ்நாளில் அவர்கள் செய்தே தீர வேண்டும்.

அவ்வாறு செய்யத்தவறின் அந்த குடும்பத்திற்கு அபசகுணம் என அவர்கள் நம்புகிறார்கள். தனது பாட்டன் அவர் காதலித்த பெண்களை திருமணம் செய்யும்படி தனக்கு 'கனவில் வந்து கூறியதாக பெற்றோர்களிடம் எட்டு வயது பையன் கூறினான்.

தங்கள் குடும்பத்தின் நலன் கருதி திருமணமாகி இரண்டு இளைஞர்களுக்கு தாயான அறுபத்தியொரு வயதுடைய பெண்களை அந்த கனவு கண்ட எட்டு வயது பையனுக்கு திருமணம் செய்து வைத்தனர் பெற்றோர்.

மணமகனின் பெயர் சனேலே மணிலேலா, மணமகளின் பெயர் தங்களுக்குரிய அடையாளங்களை இன்னும் தங்களுடன் வைத்துக் கொண்டு வாழ்கின்றனர்.

தென் ஆபிரிக்காவில் ஷவென் ஹெலன் ஷபன்கு. இந்த திருமணம் தென் ஆபிரிக்காவின் ஷவென் எனும் மாகாணத்தில் இவ்வருட முற்பகுதியில் இடம் பெற்றது. மணமகனின் தாயாரான மசிலேலாவுக்கு வயது நாற்பத்தி ஆறு. அவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். அவர் இந்த திருமணத்திற்கு அனுமதியளிக்க காரணம் மணமகனின் பாட்டனார். உயிருடன் இருந்த காலத்தில் அவர் தன் பேரன் மேல் மிகவும் அன்பாக இருந்ததே.

பதிவுத் திருமணத்தில் தம் பதிகள் கையெழுத்திட்டு சம் பிரதாய பூர்வமாக திருமணம் நடந்தேறிய பின்னர் அவர்கள் ஒன்றாக வாழ்வதில்லை. வழமையாக தாம் எப்படி வாழ்ந்தார்களோ அப்படியே வாழ்க்கையைத் தொடருவார்கள்.

மணமகன் தனது பாடசாலை கல்வியை பூர்த்தி செய்ததன் பின் தகுந்த வயதை அடைந்ததும் தனக்கு பொருத்தமானவளைத் திருமணம் செய்வார். உலகத்தில் இத் திருமணம் தொடர்பாக பலர் விமர்சித்ததற்கு மண மகனின் தாயார் இவ்விதம் கூறினார். "இது எமது குல வழக்கப்படி நடைபெற்ற திருமணமே தவிர சட்டபூர்வமான திருமணம் அல்ல" மணமகளான ஹெலனுக்கு 27,37 வயதுகளில் இரு பிள்ளைகள் உள்ளனர். அவர் மீன் சுழற்சி நிலையமொன்றில் கடமையாற்றுகிறார். யார் என்ன கூறினாலும் இத்திருமணம் தொடர்பாக தானும் தனது பிள்ளைகளும் சந்தோசப் படுவதாக ஹெலனின் கணவரான அறுபது வயதுடைய அல்பிரட் கூறினார் (நன்றி லங்காதீப)

- ஜே.எஸ்.மரியதாஸ் -


தரிசனம் அனுசரணையில் மூதூர்.

எம். எம். ஏ. அனஸின்

**அமைதிப்பூக்கள்**

கவிதை நூல் அறிமுகவிழா

காலம்: 28.07.2013 நேரம்: மு.ப.9.30 மணி

இடம்: தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கலையரங்கம்

தலைமை : கலாபூசணம்.கவிஞர்.தம்பி தில்லை முகிலன்

நூல் அறிமுகவுரை : கவிதாயினி.ஜெயா தமிழினி

நூல் நயவுரை : கலாபூசணம். கவிஞர். மூதூர் முகைதீன்

சிறப்புரை : அனிஸ்டன் ஜெயராஜா

நிகழ்ச்சித் தொகுப்பு : அல்ஹாஜ் ஏ.எல்.அலாவுதீன் (அதிபர்)

ஏ.எஸ்.அப்துல்லா(ஆசிரியர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவாரச் சிறுகதை..

# உண்மைக் காதல்... (1)

-மிதிலா ஜெயமோகன்-

என்ன மினி! எவ்வளவு நேரமாக அறைக்குள்ளே அடைஞ்சிட்டு இருக்கிறாய். முதலில் வெளியே வா! வந்து உன்னுடைய முடிவு என்ன? என்று சொல்லு என சமையறையில் இருந்தவாறே பார்வதி கேட்டுக் கொண்டிருந்தாள். என்ன அம்மா! இப்போ உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்டுக் கொண்டே சமயலறைக்குள் நுழைந்தாள் மினி. எனக்கு ஒன்றும் வேணாம் மினி. நீ படிப்பதற்கு மட்டக்களப்பு வின்சென்ற பாடசாலைக்குப் போறாய்தானே எனக் கேட்டாள் பார்வதி. இல்லை அம்மா, நான் இங்கேயே A/L படிக்கிறன். எனக்கு A/L வர்த்தகப் பிரிவில் படிக்கத்ததான் விருப்பம் அது மட்டுமில்லாமல் மட்டக்களப்பு சென்று படிப்பதென்றால் நிறைய செலவாகும். தங்கி நின்று படிப்பதற்கு இடமும் இல்லை நான் இங்கு உங்களுடன் இருந்தே படிக்கிறன் அம்மா... என்று கெஞ்சினாள் மினி.

இல்லை மினி, நீ O/L பரீட்சையில் 10A எடுத்திருக்கிறாய். அதனால் அப்பாதான் உன்னை டாக்டருக்கு படிப்பிக்க மட்டக்களப்புக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். உனக்கு என்ன படிக்க விருப்பமோ அதைப் படி. நாங்கள் கட்டாயப்படுத்தவில்லை. யோசிக்கும் போது நீ சொல்லும் காரணங்களும் சரியாகத்ததான் இருக்கிறது என்றாள் பார்வதி. மினிக்கு அளவு கடந்த சந்தோசம். ஊரிலே படிக்கலாம் என்ற சந்தோசத்தை விட ஜீவாவுடனேயே சேர்ந்திருக்கலாம் என்ற சந்தோசமே அதிகமாக இருந்தது.

முனைத்தீவு இயற்கை அழகு கொஞ்சும் ஒரு சிறிய கிராமம். இங்கு விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருபவர் தில்லைநாதன். அவரது மனைவி பார்வதி. இவருக்கு ஆசைக்கு ஒரு மகனும், ஆஸ்திக்கு ஒரு மகளுமாக இரண்டு பிள்ளைகள். தில்லைநாதன் பார்வதி தம்பதிகளின் அன்பு மகள்தான் மினி. பேரழகி என்று சொல்வதற்கில்லை என்றாலும் வசீகரமான தோற்றமும், எளிமையான அழகும், நல்ல பண்புகளையும் கொண்டவள் மினி. எல்லோரும் பார்த்து தில்லைநாதன் பிள்ளையை நல்ல அடக்கமாக வளர்த்திருக்கிறார் என்று சொல்லும் அளவிற்கு அமைதியும், பொறுமையும், அன்பும் உடையவள் மினி. தன் பெற்றோர் மீதும், தன் சகோதரன் சுபாணு மீதும் மிகுந்த பாசம் கொண்டவள் மினி. இவற்றை எல்லாம் விட மிகவும் கெட்டிக்காரி. படிப்பில் இவளை அடிக்க ஆளே இல்லை என்று சொல்லுமளவிற்து அத்தனை திறமையானவள். நன்றாகப் பாட்டுப் பாடுவாள். தில்லைநாதன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவளைப் பாட சொல்லி ரசித்துக் கொண்டிருப்பார். கிராம மக்களும் மினி மீது நல்ல அபிப்பிராயமும், மதிப்பும் வைத்திருந்தார்கள்.

மினி தரம் 01 தொடக்கம் அவளது கிராமத்தில் உள்ள பாடசாலையில்தான் படித்தாள். அவளுடன் தரம் 01 தொடக்கம் சேர்ந்து படித்தவன்தான் ஜீவா. மிகவும் அழகானவனும், மினியைப் போன்று நல்ல கெட்டிக்காரனும். தரம் 01 முதல் படிப்பில் ஜீவாவுக்கும், மினிக்கும்தான் போட்டி இருந்து கொண்டே இருக்கும். அப்பா, அம்மா, தம்பி, தங்கை என அழகிய சிறிய குடும்பம் ஜீவாவினுடைய குடும்பம். அப்பா நடராஜன் வியாபாரம் செய்பவர். அம்மா உமா.. வீட்டில் இருந்து குடும்ப பொறுப்புக்களைப் பார்த்துக் கொண்டு இருப்பவள். தில்லைநாதன் குடும்பமும், நடராஜர் குடும்பமும் பிறந்து வளர்ந்தது எல்லாமே முனைத்தீவு கிராமத்தில்தான். இரு குடும்பமும் ஒரே கிராமத்தில் இருந்தாலும் அவரவர் வேலையை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். கண்டால் சிரிப்பது மட்டுமே.

ஜீவாவும், மினியும் கூட அப்படித்தான். இருவரும் தரம் 01 தொடக்கம் ஒன்றாகப் படித்தாலும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டதே இல்லை. ஜீவா தனது வகுப்பில் உள்ள ஏனைய பெண் பிள்ளைகளுடன் சகஜமாகப் பழகுவான். ஆனால் மினியைப் பார்த்து ஒரு ஹலோ கூடச் சொன்னதே இல்லை. மினியும் அப்படித்தான். இதனால் அவர்களின் நண்பர்கள் இவர்களை கதைக்க வைப்பதற்காக சில சேட்டைகளையும் செய்வதுண்டு. ஆனால் இருவருக்குள்ளும் ஒரு இனம் புரியாத அன்பு ஒருவர் மீது ஒருவருக்கு இருந்ததை இருவரும் உணர்வதற்கு அதிக காலங்கள் கடந்தன.

ஜீவா யாரும் பெண் பிள்ளைகளுடன் அதிக நேரம் கதைத்திருந்தால் மினிக்கு அப்பெண்பிள்ளை மீது கோபமும், பொறாமையும் வருவதுண்டு. அனால் அதனை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. ஜீவாவும் அப்படித்தான். மினியை சிலவேளை அவளுக்குத் தெரியாமல் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பங்களும் உண்டு. மினி தற்செயலாக திரும்பும்போது தனது பார்வையை விலக்கிக் கொள்வான் ஜீவா. பாடசாலையில் ஜீவாவுக்கு மினி என்றும், மினிக்கு ஜீவா என்றும் பட்டப் பெயர் வைத்தே கூப்பிடுவார்கள். அப்போது இருவரும் மனதுக்குள் சந்தோசப் பட்டுக் கொண்டாலும் வெளியில் இருவரும் கோபப்பட்டு நண்பர்களைத் திட்டுவது போன்று பாசாங்கு செய்து கொள்வார்கள். ஆனால் மினி ஜீவாவுனும், ஜீவா மினியுடனும் கதைப்பதற்கு பல முயற்சிகள் எடுத்த போதும் அவை எதுவும் கைகூடாமலே போய்விட்டது. இவ்வாறாக நாட்கள் கடந்து O/L பரீட்சையும் முடிவடைந்தது.

O/L பரீட்சை முடிவு சிறப்பாக வந்ததனால் மினியை நகரப் பாடசாலைக்கு சென்று படிக்குமாறு பார்வதி கேட்டுக் கொண்டிருந்தாள். ஜீவா, மினி இருவரும் நல்ல ரிசல்ட் எடுத்திருந்தார்கள். அப்போது கூட ஒருவரை ஒருவர் வாழ்த்தக் கூடவில்லை. ஏனைய எல்லா நண்பர்களும், அசிரியர்களும் இருவரையும் வாழ்த்திய போதும் இருவரும் பேசிக் கொள்ளவே இல்லை. எல்லா மாணவர்களும் என்ன படிப்பது என்று கலந்து பேசி முடிவெடுத்திருந்தனர். மினி தனது கிராமத்திலே A/L படிப்பது என்று முடிவு செய்திருந்தாள். காரணம் ஜீவா இங்கு இருக்கும் போது அவனைப் பிரிந்து செல்ல முடியாமல் மினி ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி மட்டக்களப்பிற்குச் செல்வதை தட்டிக் கழித்தாள். ஆனர் ஜீவாவின் அம்மா தனது மகனை ஒரு பொறியிலாளராக அக்க வேண்டும் என்பதற்காக மட்/புனித மிக்கேல் கல்லூரியில் சேர்த்து விட்டார். இது பாடசாலைக்குச் சென்ற பின்புதான் மினிக்குத் தெரியும். மினிக்கு அந்த வேதனையைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஜீவாவின் மீது கொண்ட காதலை அவன் பிரிந்து சென்ற பின்புதான் அவளால் முழுமையாக உணர முடிந்தது. ஜீவா எனக்குப் பக்கத்தில் இருந்த போதெல்லாம் நான் கதைக்காமல் விட்டுவிட்டேனே என்று எங்கித் தவித்தாள். தன்னுடைய நண்பிகளுடன் கூட இது பற்றித் எதுவும் அவள் கதைத்ததில்லை. சனி, ஞாயிறு தினங்களில் ஜீவா ஊருக்கு வருவான் அவனை ஒரு தடவை பார்க்கலாம் என்று காத்திருப்பாள். ஜீவா அவளுடன் கதைத்[illegible] அவள் நினைவி[illegible] ஒன்றை மட்டும்தான்.

தரம் 09 படிக்கும் போது மலை நேர வகுப்புக்கு வந்த போது வகுப்பு நடைபெறவில்லை. எல்லோரும் சேர்ந்து பந்து விளையாடிக் கொண்டிருந்தபோது பந்து தவறுதலாக ஒரு மூடிய வகுப்பறைக்குள் விழுந்து விட்டது. எல்லோரும் பந்தை எடுக்க முயற்சி செய்த போர்தும் அதை எடுக்க முடியவில்லை. அப்போது மினி அவ்வறைக் கதவைத் திறப்பதற்காக ஜன்னல் வழியே கையை விட்டுத் திறக்க முயற்சித்தாள். அப்போது ஜீவா "பார்த்து திறங்க... கவனம் மெல்லிய கை உடைஞ்சிடப்போகுது" என்று மினியைப் பார்த்து முகத்தில் கவலையுடன் கூறியது மட்டுமே மினியுடன் ஜீவா கதைத்தது.

அதன் மூலம் ஜீவா தன் மீது அன்பு வைத்திருக்கின்றான் என்று திருப்திப் பட்டுக் கொண்டிருந்தாள். இவ்வாறாக மினக்கு ஜீவாவின் நினைவுகளுடனே காலங்கள் கடந்தன. ஜீவாவும் மட்டக்களப்பில் படித்தாலும் அவனுக்கு படிப்புடன் சேர்த்து மினியைப் பிரிந்த வேதனையும், மினியின் நினைவுகளும் அவனை வாட்டி வதைத்தன. இவ்வாறாக நாட்கள் கடந்து A/L பரீட்சை எழுதி ரிசல்ட் வெளியாகியது. மினி பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றிருந்தாள். ஜீவாவின் ரிசல்ட்டை அசோக் மூலம் தெரிந்து கொண்டாள் மினி. ஜீவாவுக்கும் பலக்லைக்கழக அனுமதி கிடைத்திருந்தது. ஜீவா பொறியியல் துறையில் கல்வி கற்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளான் என்று தெரிந்ததும் அளவு கடந்த சந்தோசம் மினிக்கு. மினிக்கு கொழும்பு பல்கலைக்கழகமும், ஜீவாவுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் கிடைத்தது. பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கு முன்பு ஒரு தடவையாவது ஜீவாவை பாரக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள் மினி.

அதே சமயம் ஜீவாவும் தனது தாயாருடன் மோட்டார் சைக்கிளில் கோாயிலுக்குச் செல்லும் போது மினியும் எதிர்பாராத விதமாக ஜீவாவைப் பார்க்க நேர்ந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் ஆசையுடன் பார்த்துக் கொண்டாலும் எதனையும் வெளிப்படுத்தாது ஜீவா சென்று விட்டான். மினிக்கு ஜீவாவைப் பார்த்ததில் சந்தோசம் தாங்க மடியவில்லை. வானத்தில் பறப்பது போன்ற உணர்வு அவளுக்கு. அந்த சந்தோசத்துடன் பல்கலைக் கழகத்திற்குச் சென்றாள். அங்கு புதிய நண்பர்கள், புதிய சூழல், அனுபவம் எல்லாம் மினிக்கு புதிதாக இருந்தது. ஏதோ ஒரு தனிமையையும், வெறுமையையும் உணர்ந்தாள் மினி. மினி சென்று சில வாரங்கள் கழிந்த நிலையில் பல்கலைக்கழகத்தில் ஸ்ரைக் இடம்பெற்றதால் வீட்டுக்கு வந்தாள்.

வீட்டுக்கு வந்த மினி பல்கலைக்கழகத்தில் தனக்கு நடந்த ராகிங் பற்றி பெற்றோரிடம் கூறிக்கொண்டு சந்தோசமாக இருந்த நேரம் மினிக்கு ஒரு கடிதத்தை கொண்டு வந்து "யாருங்க இங்க மினி உங்களக்கு ஒரு கடிதம் வந்திருக்கு என்றான்" தபாற்காரன். கடிதத்தை பிரித்து வாசிக்க வாசிக்க மினிக்கு பேரதிர்ச்சியாய் இருந்தது. ஜீவாவின் பெயர் குறிப்பிடாமல் ஜீவா எழுதுவதைப் போன்று ஒரு கடிதம். அதில் அவன் மினியை உயிருக்கு உயிராக விரும்புவதாகவும், அவள் முடிவுக்காக காத்திருப்பதாகவும் எழுதியிருந்தது. மினிக்கு ஒன்றும் புரியவில்லை. உடனே ஜீவாவின் நண்பன் அசோக்கை சந்தித்து பேசினாள் மினி.

அசோக்! இது நிச்சயமாக ஜீவா எழுதவில்லை. அவன் இந்த மாதிரி செய்யும் ஆளில்லை. யாரோ ஜீவா மாதிரி [illegible] என்று சொல்லிக் [illegible]. மினி! இதெல்லாம் வேலை இல்லாதவன் செய்யும் வேலை நீ யோசிக்காமல் உண்ட வேலையைப் பார் என்றான் அசோக். அசோக், நீ இது பற்றி ஜீவாவிடம் ஒன்றும் கதைக்க வேண்டாம் என்று சொல்லி விட்டுச் சென்றாள் மினி. அசோக்கிடம கதைத்து இரண்டு நாட்களின் பின் பாடசாலையின் பழைய மாணவர் சங்க கூட்டத்திற்கு மினி சென்றிருந்தாள். ஜீவாவும் வந்திருந்தான். கூட்டம் முடிந்ததும் மினிக்கு அருகில் வந்த ஜீவா, மினிக்கு கண்டபடி திட்டினான். இந்தக் கடிதத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமம் இல்லை என்று கூறிவிட்டு விறுவிறுவென்று சென்று விட்டான். மினி செய்வதாறியாது திகைத்துப் போய் நின்றிருந்தாள். பின் எதற்றாக ஜீவா தனக்கு ஏசினான் என்று அறியாமலே வீட்டுக்குச் சென்றாள் மினி.

வீட்டுக்குச் சென்ற மினி ஜீவாவுக்கு ஒரு கடிதம் எழுதினாள். ஜீவா! நீங்கள் கடிதம் போட்டதாக நான் நினைக்கவும் இல்லை, அதைப்பற்றி யாரிடமும் கதைக்கவும் இல்லை. நான் ஏதும் தெரியாமல் உங்கள் மனதைப் புண்படுத்தியிருந்தால் என்னை மன்னித்து விடுங்கள். ஆனால் எனக்கு ஒன்று புரிந்தது ஜீவா. உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும். உங்களுடன் பேசணும் பழகணும் என்று ரொம்ப நாட்களாக ஆசைப்படடேன். ஆனால் அதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. உங்கள் மீது நான் வைத்திருப்பது உண்மைக் காதல் என்று புரிந்து கொண்டது நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து A/L படிக்க மட்டக்களப்பிற்குச் சென்ற போதுதான். நான் உங்களை உயிருக்குயிராய் நேசிக்கிறேன். ஆனால் உங்களது மனதில் நான் இல்லை என்பதை நேற்றுத்தான் புரிந்து கொண்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் ஜீவா.: என்று கடிதம் எழுதி தனது நண்பியான ரேகாவிடம் கொடுத்து ஜீவாவிடம் கொடுக்கச் சொல்லி விட்டுச் சென்றாள் மினி.

மினியின் வீட்டில் மினியின் பெற்றோர் வெகுநாட்களாக ஒரு மாப்பிள்ளை பார்த்து வைத்திரப்பதாகவும், அவரின் போட்டோவைப் பார்த்து அபிப்பிராயத்தை சொல்லுமாறும் மினியைக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். ஆனால் இதுவரை அதனை மினி காதில் வாங்கிக் கொகள்ளவே இல்லை. இவர்களின் தொந்தரவு தாங்காமல் ஹொஸ்ரலுக்குச் செல்வதற்கு முடிவு செய்தாள். ஜீவாவின் மனதில் அவள் இல்லை என்பதை அவளால் ஏற்றுக் கொள்ளவோ, தாங்கிக் கொள்ளவோ முடியவில்லை. இதனால் சில மணிநேரம் குளியலறையில் இருந்து சத்தம் போட்டு அழுதாள். பின்பு தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டு ஹொஸ்ரலுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தாள்.

அம்மா! எனக்கு இப்போது திருமணம் வேண்டாம். புடித்து முடித்து நல்ல வேலை கிடைக்கட்டும். ஆதன் பிறகு திருமணத்தைப் பற்றி யோசிப்பம். நான் நல்ல ஒரு வேலை எடுக்கணும். கொஞ்சக் காலமாவது என்னுடைய சம்பாதிப்பில் உங்களை நல்லா வைச்சுப் பார்த்துக்கணும் என்று நினைச்சிருக்கன். அதற்குப் பிறகு நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறன் என்று கூறிவிட்டு மினி கொழும்புக்குச் செல்ல தயாரானாள்.

ஜீவாவின் அருகில் வந்த நடராஜன், உங்களுடன் கொஞ்சம் கதைக்கணும் மகன்.. என்று ஜீவாவை அழைத்தார். என்னப்பா சொல்லுங்க.. மகன், நான் உனக்கு ஒரு பெண்ணை பார்த்திருக்கன். அவளின் அம்மா, அப்பாவுடன் பேசிட்டன். ரொம்ப நல்ல பிள்ளை. எங்களுக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு.. பிள்ளையைப் பார்ரதால்... என்று கூறிக் கொண்டிருக்கும்போது ஜீவா... ஜீவா... என்ற சத்தம் கேட்க... இருங்கப்பா, யாரோ கூப்பிடுறாங்க என்று சொல்லிவிட்டு வெளியில் வந்தான் ஜீவா. நான்தான் ரேகா என்று கூறிவிட்டு, உங்களிடம் ஒரு முக்கியமான விடயம் கதைக்கணும்

(அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### பள்ளிப்பருவம்...

பள்ளிப்பருவமது பாடித்திரிந்த
காலமது
புள்ளி புள்ளி மானைப் போல்
துள்ளி
திரிந்த காலமது
கள்ளம் கபடம் இல்லாமல் கல்வி
கற்ற காலமது
கண்ணைப் போன்ற கல்வியை
கண்ணாய் கற்று
பொன்னாய் மதித்து சிறந்த
பெண்ணாய்
பாரினிலே உயர்ந்திடுவோம்!

- யூ.எப்.சஸ்னா -
தி/ ஸாஹிரா கல்லூரி, திருகோணமலை

### தமிழ்...

தமிழ் மொழி போல் இனிதில்லை
எங்கள் தாய் மொழிக்கு
எதுவும் நிகரில்லை
அன்று புலவர்களால் பாடப்பட்டது
எங்கள் தமிழ்
இன்று எங்கும் பெருமை பரப்புது
பார் எங்கள் தமிழ்
பிற மொழிகள் பல இவ்வுலகில்
இருந்தாலும்
பிரகாசமாக ஒளிர்கிறது எங்கள் தமிழ்
இவ்வுலகில் சீனமொழி அதிகமாக
பேசப்பட்டாலும்
எதிர்காலத்தில் தமிழ் மொழியே
அதிகமாக பேசப்படவேண்டும்
பிற மொழிகளை குறைத்துக் கொள்
தமிழ்மொழியை நிறைத்துக் கொள்

- ச.பிரதிக்ஷன் -
6B, தி/
கோணேஸ்வரா இந்துக்கல்லூரி,
திருகோணமலை

### மனிதா்..

நிலவின் ஒளியில்
நிலவும் குளிர்மை
நின் விழிகளில் தெரிகிறது
உலவும் தென்றலில்
உணரும் மென்மை
உன் பேச்சில் தெரிகிறது
விரிந்த வானில்
விசாலம் என்றும்
உன் இதயத்தில் தெரிகிறது
புலர்ந்த பொழுதினில்
புத்துணர்ச்சி என்றும்
உன் புலன்களில் தெரிகிறது
வானில் தோன்றும்
வளர்பிறை என்றும்
உன் வாழ்வில் தெரிகிறது -
எல்லாம் உனக்கே மனிதா

- ச.டில்ஷான்
7B, தி/ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி,

### நீ..

உன்னைப் பார்த்ததும்
மனம்
பொங்கித்தான் போகிறது
நெஞ்சம்....
நெகிழ்ந்து தான் போகிறது
ஏன் தெரியுமா?
எதையும் சிந்தித்து
இது சரிதானே என்று
பல தடவை யோசனை பண்ணி
வாய்வார்த்தைகளாய்ப்
பேசும் ரகம் நீ
வார்த்தைகளை
அள்ளிக் கொட்டியதும் இல்லை
அவசரப்பட்டு
எனக்குத் தான் தெரியும் என்று
பேசியதுமில்லை

- ஜே.மதிவதனி -

### பிறந்தநாள் பரிசு...

நாளை எனது பிறந்தநாள்
உனக்குத் தெரியுமா?
போதுமடி பாத்திமா போதுமடி
உன் பெருமையும் புகழும்
படைத்த அல்லாஹ் ஒருவனிருக்கான்
அவனைப் பயந்து கொள்ளடி

பிறந்த நாள் விழாவென்று
நம் இஸ்லாத்தில் இல்லையடி
இன்னுமேன் வீண் வம்பு
இறைவனைப் பயந்து கொள்ளடி

நாம் பிறந்த இஸ்லாத்தை
நெஞ்சில் எண்ணிப் பாரடி
இஸ்லாத்தில் பிறந்ததற்காய்
இறைவனை ஷீக்ர் செய்யடி

ஆடம்பரச் செலவும் வாழ்வும்
ஆபத்தைக் கொண்டு வருமடி
அல்லாஹ்வின் சோதனைகள்
வேதனைகள் தருமடி
கண்ணீர் சிந்தும் ஏழைகளை
கவனமதில் கொள்ளடி
அல்லாஹ் ரஸீல் அளித்த பாதை
அடியெடுத்து வையடி

நீ பிறந்த நாளுக்காக நான் தரும்
பரிசு இதுவடி
நீயும்ஓதி கருத்தை உணர்ந்து
பிறருக்கும் வழிகாட்டடி
பிறந்தநாள் இலட்சியமாய் புதிய
பாதை அமையடி
இன்பத்திலும் துன்பத்திலும் புதிய
பாதை தொடரடி

நீ தந்த உபதேசம் என் வாழ்வின்
ஒளி விளக்கடி
அவ்வொளியினிலே என் வாழ்வு
பிரகாசிக்கும் பாரடி...

-எம.கே.ஹம்சியா -


தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி



வாழ்த்துகின்றோம்

தேசிய சுற்றாடல் தினம் 2013
மீளளிக்கப்பட்ட சக்தி வளம் பயன்பாடு
முதலாம் இடம் பெற்றமைக்கான
சுற்றாடல் கழக முன்னோடி

தேவேந்திரன் ஹிருஷிகரன்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்


## வீடு - ஞாபகச் சிதறல்

-த.ஜீவராஜ்-

**புலம்** பெயர்ந்தவர்கள், இந்திய ஏதிலி முகாம்களில் இருப்பவர்கள் , எங்கென்றும் தெரியாமல் காணாமல் போனவர்கள் , நாடுகடக்கையில் சிறைப்பட்டுப் போனவர்கள் என்று நீண்டு செல்லும் வகைப்பாடுகளில் நாங்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக கருதப் படுகிறோம்.

பெயரில் இத்தனை பிரிவுகளிருந்தாலும் ஒருவகையில் நாங்களனைவரும் வீட்டில் இருந்து பிரிக்கப்பட்டவர்கள் என்னும் வகைப்பாட்டில் வருபவர்கள்.

இடம்பெயர்ந்து பதினேழு வருடங்களுக்குப்பின் திருத்தப்பட்ட எமது வீட்டின் முன்றலில், இரவில் நிலவொளியில் குடும்பத்தினர் அனைவரும் அமர்ந்திருந்து நினைவுகளை மீட்டோம்.

இனப்பிரச்சனை , எதிர்காலம் , சமகாலப்பிரச்சனைகள் , இலக்கியச் சொல்லாடல்கள் என்றெல்லாம் தீர்ந்து போய் தனியே வீட்டில் வந்து நின்றது.

வீடு...வீடு ..வீட்டைப் பற்றியே பேச்சாக இருந்தது. சிறுவயதில் அதுவொரு பெரிய உலகமாக இருந்தது.

நாங்கள் அதிலிருந்து மெல்ல மெல்ல வெளிவரவில்லை. திடீரெனப் பிரிக்கப்பட்டோம். ஒருவேளை அதன்மீதுகொண்ட அதீத அன்புக்கு அதுதான் காரணமோ தெரியவில்லை.

நடுநிசி கடந்த அந்த இரவு இன்றும் நெஞ்சில் இருக்கிறது. பிறந்து வளர்ந்த அந்த வீட்டை விட்டு ஊர்விட்டோடிய அவலத்தின் ஒவ்வொரு கணமும் நினைவிருக்கிறது. நான் பன்னிரு வயதில் பாவித்த சிறியரக துவிச்சக்கர வண்டியின் கைபிடிகள் இரண்டிலும் பசளைப் பையில் சமையலுக்குரிய முக்கிய பொருட்கள் கட்டப்பட்டிருந்தது. பின்னிருக்கையை வானொலிப்பெட்டி நிறைத்திருந்தது. வண்டியை உருட்டி நடக்கையில் பாரத்தின் பழு தெரியாமல் பார்த்துக்கொண்டது உயிர் வாழ்தல் பற்றிய பயம்.

குழந்தைகள், முதியவர் என எந்தப் பாகுபாடும் இல்லாமல் குளிர் நிறைந்த அந்த இரவில் கைக்குக் கிடைத்த துணிகளால் எங்களை மூடிக்கொண்டு தெருவில் நடந்துகொண்டிருந்தோம். துப்பாக்கி வேட்டுக்களாலும் , எறிகணை வீச்சுக்களாலும் நிறைந்திருந்தது வானம். அழுகுரல்களுக்கும் , ஓலங்களுக்கும் இடையில் தெளிவாக கேட்டுக் கொண்டிருந்தது "எப்படியாவது தப்பிப் போயிடணும்" என்ற என் ஆழ்மன ஏக்கம். அதிகாலை நேரம் பயணத்தின் பாதைகளைக் களைப்பும் , தேங்கியிருந்த நித்திரையும் மூடியது.

சாதாரணமாக மரத்துக்குக்கீழ்நின்று விளையாடினால் பேசும் அம்மாவும் அப்பாவும் ஒரு மரத்தின் கீழ் துணிவிரித்து எங்களை நடுவில் விட்டு இருகரையிலும் படுத்துக் கொண்டது ஆச்சரியம் தந்தது.

நேரம் செல்லச்செல்ல அங்கிருந்த மரங்களுக்குக் கீழுள்ள இடங்களுக்கான போட்டியும் கூடிச் சென்றது. துணிபோர்த்து நடுங்கிக் கொண்டே வந்த ஒவ்வொரு உருவங்களும் இடம் பிடித்துப் படுத்துக்கொண்டன. காலைநேரம் திடுக்கிட்டு விழித்துக்கொண்டபோது எனக்குமுன்னமே விழித்துக் கொண்டவர்கள் அவசரத்தில் விட்டுவந்த உறவுகள் ,உடமைகள் தொடர்பில் அழுது கொண்டிருந்தார்கள். திரும்பிக் காலடியில் சுருண்டு படுத்திருந்த எங்கள் வீட்டுநாயினைப் பார்த்தபோது மனத்துக்குள் பெரும் குற்றவுணர்வு தோன்றியது.

அவசர அவசரமாக ஓடிவரும் போது எங்களால் தனித்துவிடப்பட்ட நாய் இப்போது தானாகவந்து சேர்ந்திருந்தது. விட்டுவந்தது மட்டுமல்ல அந்த நிமிடம்வரை அது பற்றி எந்த உணர்வுமில்லாமல் இருந்திருக்கிறேன் என்று நினைக்கையில் பெரும் அவமானமாக இருந்தது. உயிர் பிரிதல் பற்றிய பயம் உறவுகள்மீது கொண்ட பற்றுக்களில் எவ்வளவு பிளவுகளை உருவாக்கிவிடுகிறது என்பது அப்போது புரிந்தது. இப்படித்தான் ஆரம்பித்தது எங்கள் உயிர்காத்தலுக்கான ஓட்டம். இதில் எத்தனையோ இழப்புக்கள் ,வலிகள் ,வேதனைகள் . இவைஅனைத்தையும் தாண்டி எந்தவூர் சென்றாலும் தட்டிவிட முடியாதபடி ஒட்டி இருந்து வருகிறது வீட்டைப் பற்றிய நினைவுகள்.

வேலைவாய்ப்புக்காக ,வசதிக்காக, உயர்கல்விக்காக என்று எத்தனையோ காரணங்களுக்காக உலகில் மனிதர்கள் தங்கள் சொந்தவீட்டைவிட்டு பிரிந்து செல்கிறார்கள். ஆனால் வன்முறை காரணமாக தம் சொந்த வீட்டை விட்டு வலுக்கட்டாயமாகப் பிரிக்கப் பட்டவர்களின் துயரம் தனியானதாக ,தணியாததாக இருக்கிறது.

மருத்துவபீட விடுமுறையின் போது யாழில் உள்ள பத்திரிகை யொன்றில் வெளிவந்த என் கவிதையை (சிறைவைக்கப்பட்ட வீடு) நான் திரும்பியவுடன் பத்திரமாக எனக்குத் தந்த நண்பன் கலங்கிய கண்களுடன் தனது சிறுபிராயத்தில் சொந்த ஊரான காங்கேசன்துறையில் இருந்து பிரிக்கப்பட்ட நாளை நினைவுகூர்ந்தபோது தொண்டைக்குழி வரண்டு வார்த்தைகள் வர சிரமப்பட்டது இருவருக்கும்.

இன்றுவரை உயர்பாதுகாப்பு வலயத்துள் சிறையிருக்கிறது அவர்வீடு. நாங்கள் படிக்கும்போது ஒரு வீட்டில் மதிய உணவுக்கு ஒழுங்கு செய்திருந்தோம். உணவு தயாரிப்பவரின் கணவர் மிதிவெடி மூலம் காலையிழந்தவர். அவர் தனது சொந்தவீட்டைப் பார்க்கப் போன போதுதான் இந்த அனர்த்தத்துக்குள்ளாக வேண்டியிருந்தது என அறிந்திருந்தேன்.

தற்செயலாக அவரும்,நானும் அவரது சொந்த வளவில் சந்திக்க நேர்ந்தபோதுதான் பார்த்தேன். அங்கு வீடு என்றொன்றே இல்லை. சில சுவர்களும் எஞ்சியிருக்கும் கதவின் சில நிலைகளும் அங்கு வீடொன்று இருந்ததை ஆதாரப்படுத்தி இருந்தது. அண்மையில் இடம்பெயர்ந்து பின் சொந்தவூர் திரும்பிய உறவொன்று தன் சொந்த வீட்டைப் போய்ப்பார்த்துவிட்டு வந்தபின் ஒடுங்கிப்போய் சுவரோடு ஒட்டியிருந்தது இன்னும் கண்ணுக்குள் இருக்கிறது. இப்படி நீண்டுகொண்டு போகிறது வீட்டை பிரிந்தவர்கள் பற்றிய நினைவலைகள்.

தெருவில் பயணிக்கும்போது கண்ணில் படும் வன்முறை நிமிர்த்தம் உடைந்த எந்த வீடும், அதிலிருந்தவர்களின் வேதனைகளை ஞாபகப்படுத்தும்.

அதேவேளை , விரைவில் வீட்டில் இருந்து பிரிக்கப்பட்டவர்கள் அனைவரும் மீளத்திரும்ப வேண்டுமென மனம் ஏங்குவதைத் தவிர்க்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பு–ஹன்சிகா, காதல் 2 கல்யாணம்

எங்க அப்பா அம்மா சம்மதத்துடன் ஹன்சிகாவைத் திருமணம் செய்து கொள்வேன். அஜீத் – ஷாலினி மாதிரி நானும் ஹன்சிகாவும் நல்ல தம்பதிகளாக வாழ்ந்து காட்டுவோம், என்று நடிகர் சிம்பு தெரிவித்துள்ளார். சிம்புவுடன் தொடர்ந்து வேட்டை மன்னன் மற்றும் வாலு ஆகிய இரு படங்களில் ஹன்சிகா ஹீரோயினாக ஒப்பந்தமானபோதே, இருவருக்கும் காதல் என்ற செய்தி வரும் என பலரும் எதிர்ப்பார்த்தனர். எதிர்ப்பார்ப்பை பொய்யாக்காமல், சீக்கிரமே உண்மையை ஒப்புக் கொண்டனர் இருவரும். அதுமட்டுமல்ல, திருமணப் பேச்சை கூட ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில், சிம்பு விலாவாரியாக தங்கள் காதல் மற்றும் திருமணத்தை உறுதிப்படுத்தியுள்ளார். அவர் கூறுகையில், "நானும், ஹன்சிகாவும் ஒருவரையொருவர் மிக தீவிரமாக காதலித்து வருகிறோம். உயிருக்கு உயிராக பழகி வருகிறோம். நான், ஹன்சிகாவுடன்தான் இருக்கிறேன்.

என் பெற்றோர்கள் சம்மதத்துடன், நான் ஹன்சிகாவை திருமணம் செய்து கொள்வேன். எங்கள் இருவருக்கும் திருமணம் நடப்பது உறுதி. அநேகமாக அடுத்த ஆண்டு நடக்கலாம்.

அஜித்-ஷாலினி எப்படி சிறந்த நட்சத்திர தம்பதிகளாக வாழ்ந்து காட்டுகிறார்களோ, அதேபோல் நானும், ஹன்சிகாவும் சிறந்த தம்பதிகளாக வாழ்ந்து காட்டுவோம்," என சிம்பு தனது டுவிட்டரில் கூறியுள்ளார்





## தனுஷ், சமந்தாவுக்கு விருதுகள்



தென்னிந்திய திரைப்பட விழாவில் ஒன்றான பிலிம்பேர் விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருகிறது. அதன்படி 60வது ஐடியா பிலிம்பேர் விருதுகள் வழங்கும் விழா ஐதராபாத்தில் நடந்தது.

இதில் நடிகர் தனுஷ்க்கு சிறந்த நடிகர் மற்றும் பின்னணி பாடகருக்கான இரண்டு விருதுகள் கிடைத்தன. இதேப்போல் நடிகை சமந்தாவுக்கு சிறந்த நடிகைக்கான தமிழ் மற்றும் தெலுங்கு படங்களுக்காக இரண்டு விருதுகள் கிடைத்தன. தமிழில் சிறந்த திரைப்படமாக தேசிய விருது பெற்ற "வழக்கு எண் 18/9" திரைப்படம் பெற்றது.

மேலும் தமிழில் சிறந்த இயக்குனராக பாலாஜி சக்திவேலும், சிறந்த துணை நடிகராக தம்பி ராமையாவும், சிறந்த துணை நடிகையாக சரண்யா பொன்வண்ணனும், சிறந்த இசையமைப்பாளராக இமானும், சிறந்த புது முக நடிகராக உதயநிதி ஸ்டாலினும் விருதுகள் வென்றமை குறிப்பிடத்தக்கது

# சினிமுரசு

## மரியான்...

கன்னியாகுமரி பகுதியில் உள்ள ஒரு அழகான மீனவ கிராமம். அங்கு மீனவராக இருக்கிறார் தனுஷ். 'மரியான்' என்பவர் ஆழ்கடலில் மூச்சை அடக்கி ஒரு ஈட்டி மட்டுமே துணை கொண்டு மீன்களை பிடிப்பவர் என்று பொருள்படும்.

மீனவ கிராமத்தில் தன்னுடைய நண்பர்களான அப்புக்குட்டி , இமான். அண்ணாச்சி ஆகியோருடன் சேர்ந்து மீன் பிடித்து வருகிறார் தனுஷ். அதே ஊரில் மீனவப் பெண்ணாக வரும் பார்வதி தனுஷை ஒருதலையாக காதலிக்கிறார். தன்னுடைய தொழிலில் எப்போதுமே சாவை எதிர்நோக்கி காத்திருக்க வேண்டும் என்பதால் தனுஷ் பார்வதியை காதலிப்பதை தவிர்த்து வருகிறார்.

இந்நிலையில், தனுஷின் நண்பர்கள் பார்வதியை காதலிக்க அவனை வற்புறுத்துகின்றனர். ஒருகட்டத்தில் பார்வதி மீது காதல் வயப்படுகிறார் தனுஷ். இருவரும் காதலித்து வருகின்றனர்.

அதே ஊரில் வட்டிக்கு பணம் கொடுத்து சம்பாதிக்கும் ரவுடி ஒருவனும் பார்வதி மீது காதல் கொள்கிறான். இந்த விடயம் தனுஷ்க்கு தெரிய வருகிறது.

அப்போது தனுஷ் அவனை மிரட்டி அனுப்புகிறார். பார்வதியின் அப்பா ரவுடியிடம் வட்டிக்கு பணம் வாங்கியிருக்கிறார். அதனால், அவர் வீட்டுக்கு சென்று ரவுடி பெண் கேட்கிறார். இல்லை யென்றால் வட்டிக்கு கொடுத்த பணத்தை திரும்பிக் கொடுக்கும்படி மிரட்டுகிறார்.

மறுமுனையில் நடுக்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற தன் நண்பன் அப்புக்குட்டி குண்டடிபட்டு சடலமாக அவரது உடல் கரை ஒதுங்குகிறது. இதைப் பார்த்து கதறி அழுது கொண்டிருக்கும் தனுஷிடம் பார்வதி நேரில் வந்து, ரவுடி பெண் கேட்டு வந்திருப்பதை சொல்கிறாள். இதையடுத்து பார்வதியின் வீட்டுக்கு வரும் தனுஷ், அந்த ரவுடியை அடித்து விரட்டுகிறார்.

உடனே, ரவுடி வட்டிக்கு கொடுத்த பணத்தை திருப்பித் தராவிட்டால் குடும்பத்தோடு கொன்றுவிடுவேன் என்று பார்வதியின் தந்தையை மிரட்டுகிறான். இதனால் என்ன செய்வதென்று யோசிக்கும் தனுஷ், வெளிநாட்டுக்கு சென்று சம்பாதித்து இந்த கடனை அடைக்க முடிவெடுக்கிறார்.



அதன்படி 2 வருட ஒப்பந்தத்தில் தென்ஆப்பிரிக்கா செல்கிறார். 2 வருட ஒப்பந்தத்தில் 1 வருட சம்பளத்தை முன்பணமாக பெற்று அந்த பணத்தில் பார்வதி தந்தையின் கடனை அடைத்துவிட்டு, தென்ஆப்பிரிக்காவுக்கு பயணமாகிறார்.

அங்கு பணிபுரிந்துவிட்டு ஊருக்கு புறப்படும் வேளையில் தனுஷ் மற்றும் அவருடன் பணிபுரியும் நண்பர்களை பணம் பறிக்கும் கும்பல் ஒன்று கடத்துகிறது.

இவர்களை பணய கைதிகளாக வைத்து இவர்கள் கம்பெனியிடம் பணம் கேட்கிறது அந்த கும்பல்.

இக்கடத்தலில் இருந்து தனுஷ் தப்பித்து சொந்த ஊர் திரும்பினாரா? பார்வதியை கரம் பிடித்தாரா? என்பதே மீதிக்கதை.

தனுஷ் இப்படத்தில் மீனவராக நடிக்கவில்லை, வாழ்ந்தே இருக்கிறார். தென் ஆப்பிரிக்காவில் கடத்தல் கும்பலிடம் இருந்து தப்பித்து சென்று, பாலைவனத்தில் தவிக்கும் காட்சியில் நம்மை அழவைக்கிறார். படம் முழுவதும் தனது நடிப்பை அசாத்தியமாக வெளிப்படுத்தியுள்ளார்.

நடிகை பார்வதி படம் முழுவதும் மேக்கப்பே இல்லாவிட்டாலும் அழகாக இருக்கிறார். மீனவ பெண் பனிமலர் என்ற கதாபாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தியிருக்கிறார்.

இயக்குனர் பரத்பாலா இப்படத்தை ஒரு பொழுதுபோக்கு படமாக இல்லாமல், ஒரு ஆவணப் படம் போல் படமாக்கியுள்ளார்.

ஏ.ஆர்.ரகுமான் இசையில் பாடல்கள் அனைத்தும் தாளம் போட வைக்கின்றன. 'இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால்தான் என்ன' பாடல் கேட்பதற்கு மட்டுமல்லாமல் பார்ப்பதற்கும் இனிமையாக இருக்கிறது.

மொத்தத்தில் 'மரியான்' வெல்வான்.

## பிரியாணி ரெடி

'மங்காத்தா' வெற்றிக்குப் பிறகு வெங்கட் பிரபு இயக்கும் படம் 'பிரியாணி'. இப்படத்தில் நடிகர் கார்த்தி நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக ஹன்சிகா மொத்வானி நடிக்கிறார். இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இது அவருக்கு 100-வது படமாகும். ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் சார்பாக ஞானவேல் ராஜா இப்படத்தை தயாரிக்கிறார்.

வெங்கட்பிரபுவின் இயக்கத்தில் வித்தியாசமாக தயாராகிவரும் 'பிரியாணி'யை பரிமாறும் நேரம் தயாராகிவிட்டது. ஆம், பிரியாணி படத்தை வருகிற செப்டம்பர் மாதம் 6-ந் திகதி வெளியிடமுடிவு செய்துள்ளனர். 'பிரியாணி'



படத்தின் புகைப்படங்கள் ஏற்கெனவே வெளியாகி ரசிகர்கள் மத்தியில் அமோக ஆதரவை பெற்றது [illegible] படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிமாக்கியுள்ளது.

## நடிகை மஞ்சுளா மரணம்

மறைந்த நடிகை மஞ்சுளாவுக்கு திரையுலகினர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

59 வயது மஞ்சுளா தனது ஆலப்பாக்கம் பங்களாவில் கட்டிலில் விழுந்து படுகாயமடைந்ததால், மருத்துவமனையில் மரணமடைந்தார்.

கலைமாமணி விருது பெற்ற மஞ்சுளா தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தியில் 400-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவர். அவரது மறைவுக்கு தமிழ் திரையுலகமே திரண்டு அஞ்சலி செலுத்தியது

அவர் இளம் நடிகைகளுடன் கொண்டிருந்த சுமூகமான உறவை அவர்களின் ட்விட்டர் செய்திகளில் இருந்துதான் பலரும் அறிந்து கொண்டனர். குஷ்பு தனது ட்வீட்டில், எனது குழந்தைகள் தங்களின் அன்பான பாட்டியை இழந்து விட்டார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். இதே போல் இளம் நடிகைகள் பலரும் தங்களது அஞ்சலியை இணையத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடிக்கணனியின் மின்சாரத்தை மிச்சப்படுத்த சில வழிகள்!

மடிககணினி இன்று எமது நமபிக்கைக்குரிய தோழனாக உருவெடுத்துள்ளது. நாம் எங்கிருந்தாலும், அது சந்தையாக இருந்தாலும், விமான நிலையத்தின் ஓய்வு அறையாக இருந்தாலும், அங்கு இருந்த வண்ணமே நம் வர்த்தக நடவடிக்கைகளை, அலுவலகப் பணிகளை எளிதாக மேற்கொள்ள முடியும்.

இவ்வாறு எமது வேலைகளை இலகுவாக்கும் இம் மடிக்கணினி சில சமயம் தேவையான பொழுது மின் சேமிப்பில்லை (பற்றரி லோ) என்று ஒரேடியாக முடங்கிவிடும். இப்பிரச்சனை நேர்ந்து விடாமல் பார்த்துக்கொள்ள இதோ சில வழிகள் -

1. எப்போதெல்லாம் இயலுமோ, அப்போதெல்லாம், மடிக்கணணியை மின் சக்தி வழங்கும் ப்ளக் பாய்ண்ட்களில் செருகவும். எப்போதும் முழுமையான சார்ஜ் இருக்கும் வகையில், மடிக்கணினியின் மின்கலத்துக்கு தீனி போட்டுவிட்டால், அது நம்மைக் கைவிடாது.
2. மடிக்கணினியின் திரையின் ஒளித்திறன் வெளிப்பாட்டை எப்போதும் குறைவாகவே வைத்திருக்க வேண்டும். இப்போது எல்.இ.டி. பேக் லைட்ஸ் கொண்ட திரைகளே மடிக்கணினியில் பயன்படுத்தப்படுகின்றன. முன்பு சி.சி.எப்.எல். (CCFL Cold Cathode fluorescent tube) இருந்த இடத்தில் இவை இடம் பெற்றுள்ளன.
3. மின்கலத்தின் சக்தியினை அதன் வாழ் நாளுக்கு முன்னரே, முடக்கிப் போடுபவை, தவறான இயக்கத்தைக் கொண்டிருக்கும் புரோகிராம்களாகும். இவை ப்ராசசரின் உழைப்புச் சுற்றினைத் தேவையற்ற அளவில் மிகுதியாக மேற்கொள்ளும். இதனால், அதற்கேற்ற வகையில் மின்சக்தி வீணாகச் செலவழியும். ஆகவே தேவை இல்லாத அனைத்து ப்ரோகிராம் களையும் கணினியில் இருந்து அழித்து விடுவது நல்லது.
4. மின்கலத்தின் சக்தியில் இயங்கு கையில், மடிக்கணினியின் இயக்கத்தின் பின்னணியில் செயல்படும் தேவையற்ற புரோகிராம்களை நிறுத்திவிடலாம். குறிப்பாக கணினி இணைய இணைப்பில் இருக்கையில், பல புரோகிராம்கள் ப்ராசசரின் சக்தியைப் பயன்படுத்தி, இணைய தளங்களைத் தொடர்பு கொண்டு, பெரிய அளவிலான அப்டேட் புரோகிராம்களை பதிவிறக்கம் செய்து கொண்டிருக்கும். இவை மின்கலத்தின் சக்தியை வீணடிக்கும் என்பதால், இவற்றை நிறுத்திவிடலாம்.
5. மடிக்கணினியுடன் இணைக்கப் பட்டுள்ள, பயன்படுத்தாத சாதனங் களை நீக்கிவிடலாம். உள்ளாக இணைந்த மோடம், வை-பி, புளூடூத் போன்றவை பயன்படுத்தப்படவில்லை எனில், செயல்பாட்டினை நிறுத்தி வைக்கலாம்.



# விளையாட்டுப் பையன்

## படம் ஹிட் ஆனால் ஆடை அவிழ்ப்பேன்

### பூனம்



தான் நடித்துள்ள நஷா திரைபடம் ஹிட்டானால் இரசிகர்களுக்காக ஆடைகளைத் துறப்பேன் என்று பூனம் பாண்டே தெரிவித்துள்ளார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு மாடலான பூனம் பாண்டேவை யார் என்றே நமக்கெல்லாம் தெரியாமல் இருந்தது. அப்போது தான் ஒரு அதிரடி அறிவிப்பை வெளியிட்டு பிரபலமானார் பூனம். அதாவது இந்திய கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை வென்றால் மைதானத்தில் நிர்வாணமாக வருவதாக அறிவித்தார். அதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால் அணி வீரர்கள் முன்பு மட்டும் நிர்வாணமாவேன் என்றார்.

ஐ.பி.எல் போட்டிகளில் கடந்த ஆண்டு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி கிண்ணத்தை வென்றபோது பூனம் ஆடையின்றி புகைப் படங்களுக்கு போஸ் கொடுத்து அதை வெளியிட்டார். தற்போது, பூனம் பாண்டே நஷா என்ற ஹிந்தி திரைப்படத்தில் நடித்துள்ளார். படத்தின் போஸ்டர்கள் மிகவும் ஆபாசமாக இருப்பதாகக் கூறி மும்பையில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. டெல்லி மற்றும் மும்பையில் நஷா திரைப்பட போஸ்டர்கள் எரிக்கப்பட்டன.

நஷா திரைப்படம் ஹிட்டானால் இரசிகர்களுக்காக மீண்டும் ஆடை துறப்பு செய்வேன் என்று பூனம் அறிவித்துள்ளார்.

**பாடல்களை பதிவிறக்க தட்டவேண்டிய இணையத்தளங்கள்**

| | |
|---|---|
| www.tamilbeat.com | www.123musiq.com |
| www.tamilmp3world.com | www.tamiwire.com |
| www.raaga.com | www.deemusic.com |

# ஒரு கொலையின் கதை

13 (மாயன்)



விசாரணைகளுக்காகப் பலதடவைகள் அழைக்கப்பட்டிருந்தார்கள்....

கேதீஸ் கொல்லப்பட்டவுடனேயே அவனது மனைவி இலண்டனில் இருந்து தான் வருகை தரும்வரை அவனது சடலத்தை வைத்திருக்கும்படி கேட்டுக்கொண்டிருந்தாள். அத்துடன் தனது திருமணக் கூரைச் சேலையையும் அவனது பெட்டியில் இட்டு வைக்குமாறும் கூறியிருந்தால்.

எனினும் ஐந்து நாட்கள் கடந்தும் அவள் வருவதற்கான வாய்ப்பு அவளுக்குக் கிட்டவில்லை.

எனவே அவளுக்கு விடயத்தை அறியத்தராமலேயே சடலத்தை புதைக்கும் முடிவை அனைவரும் எடுத்திருந்தனர். அதன்படி 22ம் திகதி மாலை 4.00 மணியளவில் கேதீஸின் இறுதிப் பயணம் ஆரம்பமானது. மக்கள் வெள்ளம் புடைசூழப் புறப்பட்ட அவனது இறுதிப்பயணம் காவல்துறை சீருடை தரித்த, சீருடை தரிக்காத புலனாய்வாளர்களின் குழுக்களையும் கொண்டிருந்தது. அவர்களுள் சிலர் அந்த இறுதிப்பயணத்தையும் தமது கையடக்கக் காட்சிப் படக் கருவியினுள் (Video Camera) பதிவாக்கிக்கொண்டிருந்தார்கள்.

கேதீஸின் உடலம் வீட்டை விட்டுக் கிளம்பிய சுமார் 25 நிமிடங்களின் பின் முச்சக்கரவண்டியொன்று கேதீஸின் வீட்டின் வாசலில் வந்து நின்றது. அவ் வண்டியிலிருந்து கொஞ்சம் நிறமான நீண்ட தலைமுடியுடன் கூடிய ஒருவன் மொதுவாகத் தலையை நீட்டி வீட்டின் நிலைபரங்களை நோட்டமிட்டான். அவ்வாறு அவன் நோட்டமிடுவதை நான்கு கண்கள் அவதானித்திருந்தன.

அவற்றில் ஒரு சோடிக் கண்கள் கேதீஸின் மனைவியின் தங்கையுடையது. மற்றையது அங்கிருந்த வெளித்தெரியாத புலனாய் வாளருடையது.

மனைவியின் தங்கை உடனடியாகவே அம் முச்சக்கர வண்டியில் வந்தவனை இனங் கண்டு கொண்டாள். அவன் கேதீஸின் உடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த போதும் அங்கு வந்து சுற்றித்திரிந்து யாரையோ தேடிவிட்டு பின்னர் உடலத்தை சவச்சாலைக் கதவருகில் நின்று பார்த்து விட்டுக் கிளம்பிச் சென்றிருந்தான். அவன் திரும்பவும் சடலம் வீட்டைவிட்டுச் சென்ற பின் வீட்டிற்கு வர வேண்டிய தேவை என்ன? என்ற கேள்வி அவளுக்கு எழுந்தது.

ஏனைய இரு சோடிக் கண்களும் அவனை அவதானித்து விட்டு தனது குறிப்புப் புத்தகத்தில் அவ் விடயத்தைப் பதிந்து கொண்டது.

மாலை 5 மணியை எட்டும் போது கேதீஸின் உடல் புதைக்கப்படத் தயாராக மயானத்தில் வைக்கப் பட்டிருந்தது. அப்போதுதான் அவனது மனைவியின் வேண்டுகோளான கூரைப் புடவையை அவனது உடலின் அருகில் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அனைவரும் மறந்து விட்டதை ஞாபகப்படுத்திக் கொண்டனர். உடனடியாக அவளது கூரைப் புடவையை எடுத்துவந்து அதனை கேதீஸின் உடல் மீது வைப்பதற்காக பெட்டியைத் திறக்க முனைந்த போது.....

மழை...... அன்று காலையிலிருந்து வானம் கருக்கொண்டிருந்தாலும் ஒரு துளியையேனும் உதிர்த்தா அக் கருவானம் கேதீஸின் பெட்டியைத் திறக்க முனைந்தபோது ஆக்ரோசமாகக் கொட்ட முனைந்தது. கேதீஸின் மனைவியின் இறுதி ஆசையை யாராலும் நிறை வேற்ற முடியாது போயிற்று...... அக் கூரைப்புடவை கிழிக்கப்பட்டு அவனது உடலத்தை வைத்திருந்த பெட்டியின் மீது போடப்பட்டு அப் பெட்டி மண்ணுள் புதையுண்டு போனது. 1984 ஏப்ரல் மாதம் 24ம் திகதி பிறந்த அந்த உயிர் 2012ம் ஆண்டின் அதே மாதத்தில் பிறந்த நாளைக் கொண்டாட ஆறு நாட்களுக்கு முன் பறிக்கப்பட்டு, ஈஸ்வரதாசன் கேதீஸ்வரன், 22ம் திகதி மாலை நேரத்தில் மண்ணுள் புதையுண்டு போனான்.

காவல்துறைப் புலனாய்வுக் குழுக்களின் நடவடிக்கைகள் துரித கதியில் இயங்க ஆரம்பித்தன. 19ம் திகதி மாலை நீதிபதியின் கவனத்திற்கு அறிக்கையொன்றைத் தாக்கல் செய்தனர் புலனாய்வாளர்கள்.

அவ் அறிக்கையானது கேதீஸின் கையிலிருந்து கைப்பற்றப்பட்ட மீள் நிரப்பும் அட்டை எந்தக் கைத்தொலைபேசி எண்ணுக்கு மீள்நிரப்பப்பட்டது என்பதை அறியும் சட்ட ஆணையைப் பெற்றுக் கொள்வதற்கான அறிக்கையாக இருந்தது. இவ் அறிக்கையினைத் தொடர்ந்து இலங்கையின் பிரபல்யமான கைத்தொலைபேசிச் சேவை வழங்குனரான “டயலொக்” கம்பனிக்கு சட்ட ஆணையொன்று பிறப்பிக்கப் பட்டது. அவ் ஆணையில் குறித்த மீள்நிரப்பு அட்டை எந்தக் கைத்தொலைபேசி எண்ணுக்கு நிரப்பப்பட்டது என்பதையும் அக் கைத் தொலைபேசி எண்ணின் உரிமையாளர் யார் என்பதையும் காவல்துறைப் புலனாய்வுப் பிரிவிற்கு அறியத்தருமாறு கட்டளையிடப்பட்டிருந்தது.

2012 ஏப்ரல் 20ம் திகதி ஏனைய புலனாய்வுக் குழுக்கள் இரண்டும் திருகோணமலையில் முகாமிட்டன.

ஆரம்பக்கட்ட விசாரணை அறிக்கைகளை புலனாய்வாளர்கள் தமது புலனாய்வுக் கண்களைக் கொண்டு அலசிய போதும் சந்தேகத்திற்கு இடமான தடங்கள் எவையும் அவர்களுக்குத் தட்டுப் படவில்லை. கொலையின் பின் தற்போது வரை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டவர்கள் யாருக்கும் கொலை காரர்களைக் கண்டு கொள்ளக்கூடிய தகவல்கள் தெரியவில்லை என்பதுடன் கொலைக்கான காரணத்தைக் கூட அவர் ஊடாகக் கண்டுகொள்ள முடியவில்லை என்பதைப் புலனாய்வாளர்கள் தெரிந்து கொண்டார்கள்.

ஆனாலும் அந்த தலைமயிர் வளர்த்த, காதில் கடுக்கண் அணிந்தவன் தொடர்பாக கேதீஸின் மனைவியின் தங்கை தனது சந்தேகத்தை வெளியிட்டிருந்தாள். அதனை விசாரிப்பதா? இல்லையா? என்பதைப் பற்றி அக்குழு முக்கியமான முடிவொன்றை எடுத்தது.

மிகச் சரியாகத் திட்டமிட்ட கொலையொன்றாகவே கேதீஸின் கொலை புலனாய்வாளர்களுக்குப் பட்டது. அவ்வாறாயின் கொலைஞன் சந்தேகத்திற்கிடமாக இவ்வாறு வைத்தியசாலைக்கும் மரண வீட்டிற்கும் வந்து செல்ல வேண்டிய தேவைகள் எவையும் இல்லை. கேதீஸ் கொலை செய்யப்பட்டதை உறுதிப்படுத்திக் கொண்ட கொலைஞன் தனக்குத் தகவல் அனுப்பும் மிக நெருக்கமான தகவலாலனை இவ்வாறு வெளிப்படையாகத் திரிய இடம் கொடுக்க மாட்டான். எனவே அம் மயிர் வளர்த்தவனில் சந்தேகங் கொள்வதால் பயனில்லை என்பதை புலளாய்வாளர்கள் தெளிவறத் தெரிந்து கொண்டார்கள். ஆனால் அவனை விசாரித்தால் தாம் தவறான பாதையில் பயணிப்பதாக கொலைஞர்களுக்குத் தகவல்கள் போகும் என்பதை புலனாய்வாளர்கள் அனுமானித்தார்கள்.

எனவே அவர்கள் அந்தத் தலைமயிர் வளர்த்த, கடுக்கண் அணிந்தவனை வெளிப்படையாகத் தேடத் தொடங்கினார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 248 ஓட்டங்களால் டைனமிக்ஸ் கழகம் அபார வெற்றி

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் 50 ஓவர்கள் லீக் முறையிலான சுற்றுப்போட்டியில் டைனமிக்ஸ் கழகம் 248 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் செவ்வாய்க்கிழமை இப்போட்டி நடைபெற்றது.நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற டைனமிகஸ் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது.46.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களம் இறங்கிய கிரிசாந்தன்35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மற்றைய வீரரான குமுதன் 100 ஓட்டங்களையும் சதுர்சன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பசார் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் அன்பாஸ் 56 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும் மௌஜீத் 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு 293 என்ற ஓட்ட இலக்கினை எதிர்கொண்டு களம் புகுந்த பசார் விளையாட்டுக் கழகம் 16.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

## இலங்கை, இந்தியா முறையே 1 ம் 3ம் இடங்களில்!!

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்ட டி 20 தரவரிசைப் பட்டியலில் இலங்கை அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்திய அணி தொடர்ந்தும் 3வது இடத்தில் இருக்கிறது.

ஜுலை 27-ந் திகதியன்று பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகளிடையே 2 டி20 போட்டிகள் நடைபெற உள்ளன. அதற்கு முன்னதாக இன்று டி 20 தர வரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதில் 134 புள்ளிகளுடன் இலங்கை அணி முதலிடத்திலும், 127 புள்ளிகளுடன் மேற்கிந்திய தீவுகள் அணி 2வது இடத்திலும் இருக்கின்றன. இந்திய அணி 121 புள்ளிகளுடன் தொடர்ந்து 3வது இடத்திலேயே இருக்கிறது. 118 புள்ளிகளுடன் பாகிஸ்தான் 4, 113 புள்ளிகளுடன் இங்கிலாந்து 5, தென்னாப்பிரிக்கா 112 புள்ளிகளுடன் 6வது இடத்தைப் பிடித்துள்ளன. மொத்தம் 16 நாடுகளில் ஆப்கானிஸ்தானும் கனடாவும் போதுமான போட்டிகளில் விளையாட வில்லை. இதனால் 14 அணிகளைக் கொண்டே தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.



## திருமலையில் விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு செயலமர்வு



விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான ஐந்து நாள் செயலமர்வொன்று திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.திருகோணமலை கால்பந்தாட்ட சங்கம், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்துடன் இணைந்து இச்செயலமர்வினை ஏற்பாடு செய்திருந்தது.

திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இவ்விளையாட்டு செயலமர்வில், 6 முதல் 12 வரையான 350 மாணவர்களுக்கு 30 உடற்கல்வி ஆசிரியர்கள் இப்பயிற்சியினை வழங்கினர்.இந்நிகழ்விற்கு அதிதிகளாக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தென்னாசிய பிராந்தியத்திற்கான மேற்பார்வையாளர் வின்சன்ட் சுப்பிரமணியம், திருகோணமலை நகரசபை தலைவர் க.செல்வராஜா, திருகோணமலை கால்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் க.யோகரெட்னம் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

### சிரேஷ்ட மெய்வலுனர் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுனர் சங்கம் சிரேஷ்ட மெய்வல்லுனர் போட்டிக்கான விண்ணப்பங்களைக் கோரி உள்ளது. 16, 18 20 வயதுக்கு உட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பம் செய்ய முடியும். பாடசாலைகளுக்கான பதிவுக் கட்டணம் ரூபாய் 500.00. தனி நபருக்கான கட்டணம். ரூபாய் 50.00, அஞ்சல் ஓட்டம் ரூபாய் 200.00 ஒரு மாணவன் 3 தின நிகழ்வுகளில் மாத்திரம் பங்கு கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி 02.08.2013. போட்டிகள் புரட்டாதி மாதம் 6ம், 7ம், 8ம் திகதிகளில் கொழும்பு சுகததாசா விளையாட்டு அரங்கில் நடைபெற உள்ளது. - (சி.சசிகுமார்)

பெயர் : விராட் கோலி
பி.திகதி : 1988.11.05
வயது : 24 வருடங்கள்
வலது கை துடுப்பாட்ட வீரர்
வலது கை மித. வேக பந்துவீச்சாளர்



| | MAT | INNS | RUNS | H/S | AVG | 100S | 50S | CTS |
|---|---|---|---|---|---|---|---|---|
| Test | 18 | 31 | 1175 | 116 | 41.96 | 4 | 6 | 23 |
| ODI | 109 | 106 | 4493 | 183 | 49.37 | 15 | 23 | 52 |
| T20I | 20 | 18 | 558 | 78* | 34.87 | 0 | 4 | 8 |

# நிறைவுறும் வருடமொன்றின் நினைவுகள் - 3
# "மலைமுரசின் ஓராண்டுப் பயணம்"

- ஆசிரியர் -

செய்திகளை பத்திரிகையின் பக்கங்களில் இடத் தொடங்கிய போது தலைப்புக்களில் கூடிய கவனம் செலுத்தி வாசகர்களை கவர்ந்திழுக்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கு ஏற்பட்டது. அவ் வெண்ணத்தால் தலைப்புக்கள் சுவையாக இருப்பதற்காக தமிழ் மொழியின் நெகிழ்வுத் தன்மையை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டோம். அதனால் தலைப்புக்கள் எதுகை மோனையுடன் உருவாகத் தொடங்கியது. பின்னொருநாளில் எமது தலைப்புக்கள் தொடர்பாக கோபம் கொண்டிருந்த வாசகர் ஒருவர் "ரி.ராசேந்தரின் பாணியில் தலைப்புக்கள் வைக்கின்றீர்" என்று கடும் காட்டத்துடன் விமர்சித்திருந்தார்.

நாம் பத்திரிகையை ஆரம்பித்த மாதத்திலிருந்து சரியாக ஒரு மாதத்தில் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்கள் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. அதனால் பத்திரிகையின் தலைப்பு மற்றும் முக்கிய செய்திகள் யாவும் தேர்தலை அண்டியதாகவே இருந்தது.

முதலாவது பத்திரிகையில் செய்திகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. மூன்று பெரிய கட்டுரைகள், அவற்றில் இரண்டு அரசியல் கட்டுரைகளும் ஒரு சாவதேசக் கட்டுரையும் இடம் பிடித்தன.

செய்திகள் கட்டுரைகள் போன்றவை தயாராகி பத்திரிகையின் பக்கங்களில் அடுக்கப்பட்டவுடன் இடைவெளிகளை நிரப்புவதற்காக எவற்றைச் சேர்ப்பது என்று தெரியாமல் எதையெல்லாம் சேர்க்க முடியுமோ அவற்றையெல்லாம் நிரப்பி முடித்தோம்.

28ம் திகதி காலை 10 மணி ஆயிற்று..... வேலைகள் நிறைவுற்றிருந்தன. பத்திரிகையின் பக்கங்கள் நிரம்பியிருந்தன. மலைமுரசு பதிப்பிற்கான தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது.

28ம் திகதி இரவு, பதிப்பின் பின் பத்திரிகை எமது கைகளுக்குக் கிடைத்தது. எமது முதலாவது பத்திரிகை கைகளில் தவழ்ந்தது.

அப் பத்திரிகையில் எனது ஆசிரியத் தலைப்பின் வரிகள் தற்போதும் எனக்குப் பசுமரத்தாணி போல் நினைவில் இருக்கின்றன.

" இப் பத்திரிகை எமது நீண்ட காலக் கனவின் நனவுத் தோற்றமோ அல்லது எமது வாழ்வின் இலட்சியமோ அல்ல. ஆனால் இவ் வெளியீடு காலத்தின் தேவையாக இருக்கின்றது என்பதும் நிரப்பவேண்டிய மிகப் பெரிய இடைவெளியொன்றினை நிரப்பவென எழுப்பப்படும் கட்டுமானத்தின் ஓர் கல்லாக அமைக்கின்றது என்பது கண்கூடு" என்றவாறு இருந்தது அவ் ஆசிரியத் தலையங்கம்.

முதலாவது பத்திரிகையிலிருந்து அடுத்து வந்த நான்கு பதிப்புக்களும் இலவசப் பதிப்புக்களாக விநியோகிக் கப்பட்டன.

தேர்தல் காலத்தில் தனியே கறுப்பு வெள்ளை நிறத்தில் பத்துப் பக்கங்களைத் தாங்கித் திடீரென வெளியாகிய பத்திரிகையொன்றினை பார்ப்பவர்கள் என்ன நினைத்தி ருப்பார்கள்? ஆம். எதோ ஒரு அரசியற் கட்சியின் பத்திரிகையாகவே அப்பத்திரிகை நோக்கப்பட்து.

எனினும் திருகோணமலையில் இயங்கும் அரசியற் கட்சிகள் எவையும் அப்பத்திரிகைக்கு உரிமை கோராது விட்ட படியால் இலவசப் பத்திரிகைகளை வாங்கி வாசித்த அனைவருக்கும் வியப்புத் தான் மேலோங்கி நின்றது. எனினும் திருகோணமலையில் எவ்விதமான பறையறிவிப்புக்களுமின்றி வெளிவந்த மலைமுரசு தனக்கானதொரு அதிர்வினை ஏற்படுத்தியிருந்தது உண்மை.

மூன்றாவது பதிப்பின் பின் முதலாவது மலைமுரசின் சந்திப் பொன்றை எமது ஆர்வலர்களையும் உட்படுத்தி எனது அலுவலகத்தில் கூட்டியிருந்தேன். அக் கூட்டத்தில் தான் மலைமுரசிற்கான தெளிவான சிந்தனையொன்றை வகுத்துத் தந்திருந்தார் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருமலை வளாக தொடர்பாடல் கற்கைகள் பீடாதிபதி மதிப்பிற்குரிய கலாநிதி எஸ் இரகுராம் அவர்கள். அத் தெளிவான சிந்தனை யாதெனில் மலைமுரசு திருகோணமலைக்கான பத்திரிகையென்றால் அப் பத்திரிகை தனது பார்வையைத் திருகோணமலையின் பக்கமே கூடுதலாகச் செலுத்த வேண்டும் என்பதாக இருந்தது.



எமது முதலாவது பதிப்பு திருகோணமலைச் செய்திகளுக்கு முக்கியத்துவம் அளித்திருந்தாலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பதிப்புக்கள் தேசியச் செய்திகளின் பால் கூடுதலான பார்வையைச் செலுத்தத் தொடங்கி யிருந்தது. அவர் வகுத்துத் தந்த அத் தெளிவான சிந்தனையின் பின் மலைமுரசு தனியே திருமலைக்கான பத்திரிகையாக மாற்றம் பெறத் தொடங்கிற்று. அதனால்தான் மலைமுரசு திருமலையில் உறுதியாகத் தனது வாசகர் வட்டத்தை உருவாக்க முடிந்துள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### நகரின் பல பிரதேசங்களில் மிகப்பெரிய சூதாட்ட மையங்கள்

கடந்த வாரம் வெளியான வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் கொழும்பு 01இல் உள்ள D.R.விஜயவர்த்தன மாவத்தையின் வலையம் 01 இனுள் மட்டும் சூதாட்ட விடுதிகளை நிர்மாணிப்பது என்ற பேச்சு அற்றுப்போய் பெருநகரப் பகுதிகள் அனைத்திலும் சூதாட்ட விடுதிகள் அமைக்கப்படப் போகின்றது என்பது தெளிவாகின்றது.

தந்திரோபாய அபிவிருத்தித் திட்ட சட்டத்தின்கீழ் வெளியாகியுள்ள வர்த்தமானி அறிவித்தல் ஆனது கொழும்பு 02இல் உள்ள நீதிபதி அக்பர் மாவத்தையில் சூதாட்ட வசதியுடன் கூடிய உல்லாச விடுதி ஒன்று அமைக்கப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அரசு பல தடவைகள் சூதாட்ட விடுதிகளை ஒழுங்குபடுத்துவோம் என்றும் குறிப்பிட்ட பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் சூதாட்ட விடுதிகளை அமைக்கப் போவதில்லை என்றும் கூறி வருகின்ற போதும் 2010 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட சூதாட்ட ஒழுங்குபடுத்தும் சட்டம் இவ்வகை தடைகள் எவற்றையும் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிப்படையாக பல கசினோக்கள் இயங்கும் இலங்கையில் சூதாட்டம் சட்டப்படி குற்றமாகும் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### யாழ்ப்பாண எழுச்சியை நாங்கள் நிறுவுவோம் — ஐ.ம.சு.மு

வட மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி "யாழ்ப்பாணத்தின் எழுச்சியை மீளக் கொண்டு வருவோம்" என்று வாக்கு வேட்டையில் இறங்கியுள்ளது.

தற்போது வரை ஐ.ம.சு.மு வட மாகாணசபைத் தேர்தலின் பிரதம வேட்பாளரை அறிவிக்காதுள்ளது. ஆனால் அதிர்ச்சி வைத்தியமாக சி.வி.விக்நேஸ்வரன் அவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது வேட்பாளராக களமிறக்கியுள்ளது. தேர்தல் முடிந்த பின்னரே வழமை போல ஐ.ம.சு.மு தனது பிரதம அமைச்சர் யார் என அறிவிக்கும் என யாழ்ப்பாண மாவட்ட ஐ.ம.சு.மு யின் அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவ்வாறு தெரிவிக்கும் போதே ஐ.ம.சு.மு வெல்லுமாக இருந்தால் பிரதம அமைச்சராக தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பிருப்பது அவரில் புலப்பட்டது.

### இலத்திரனியல் கழிவுகளின் இருப்பிடமா இலங்கை

வெளிநாடுகளில் பாவிக்கப்பட்ட இலத்திரனியல் பொருட்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு முனைப்புற்றுள்ளதாக வலு மீள் உருவாக்க அமைச்சர் சுசில் பிரேமஜயந் தெரிவித்தார்.

மூன்று வருடங்களுக்கு மேல் பாவிக்கப்பட்ட கணனிகள், கைத்தொலைபேசி போன்றவற்றை இறக்குமதி செய்வதை தடை செய்யும் திட்டம் உள்ளதாக அவர் தெரிவித்தார். இத் திட்டத்தினால் கணனி மற்றும் கைத்தொலைபேசி களின் விலைகள் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் உள்ளதாக தெரியவருகின்றது.

ஆனாலும் இலத்திரனியல் கழிவுகளை இலங்கையில் அமுக்குவதால் ஏற்படும் ஆபத்துக்களை விட விலை அதிகரிப்பு ஒன்றும் பெரிதல்ல என்றும் தெரிவித்தார். எதிர்வரும் இரு மாதங்களுக்குள் தடை செய்யும் முடிவு வர்த்தமானியில் வெளிவரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பொது நிறுவனங்கள் மீதான குழுவின் அறிக்கை மந்திரி சபையில்

பொது நிறுவனங்கள் மீதான குழுவின் அறிக்கை அதன் முன்மொழிவுகள் மந்திரி சபையில் கையளிக்கப்படவுள்ளது.

இம் முன்மொழிவுகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் சம்பளம் ரூபா 48,940 இலிருந்து குறிப்பிட்ட அளவு அதிகரிக்கப்படவேண்டும் என்ற முன்மொழிவும் காணப்படுகிறது.

247 அரச நிறுவனங்களின் கணக்குகளை ஆராய்ந்த இக்குழு முக்கியமான 20 முன்மொழிவுகளை பிரேரித்துள்ளது.

### விக்நேஸ்வரனை புலம்பெயர் தமிழர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்

வடமாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சி.வி.விக்நேஸ்வரன் அவர்களை புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் அங்கீகரித்துள்ளன.



இந்நியமனம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையே முரண்பாடுகளை தோற்றுவித்திருக்கின்றது என்ற விடயத்துக்கு அப்பால் இந்நியமனத்தை உலகத் தமிழ் பேரவை வரவேற்றுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்நியமனத்தால் தமிழ் மக்களின் சனநாயக ஸ்திரத்தன்மை மேலும் ஒரு படி உறுதியாக்கப்பட்டுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

### த.தே.கூ வில் முரண்பாடுகள் இல்லை

வடமாகாண முதலமைச்சு வேட்பாளராக விக்நேஸ்வரனை நியமித்ததால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் முரண்பாடுகள் எழுந்துள்ளதாக வெளிவந்த அறிக்கைகளை புறந்தள்ளியுள்ள த.தே.கூ தம்மிடையே அவ்வாறான முரண்பாடுகள் எவையும் இல்லை என சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார். இன்னும் ஓரிரு நாட்களுள் வாக்காளர் பட்டியல் பிரச்சனைகள் எதுவுமின்றித் தயாராகிவிடும் எனத் தெரிவித்த அவர் எங்களால் வாக்காளரின் பட்டியலை வெளியிடுவதில் எவ்வித பிரச்சனைகளும் இருக்காது என்றும் தெரிவித்தார்.

### இராணுவம் தலையிடாது

வடமாகாண சபைத் தேர்தலின் பாதுகாப்புக் கடமைகளில் இராணுவம் தலையிடாது என இராணுவம் தெரிவித்துள்ளது. எனினும் காவல்துறை வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் தாமும் காவல் கடமைகளில் சமூகமளிப்போம் என இராணுவம் தெரிவித்துள்ளது. வடமாகாண சபைத் தேர்தலில் இராணுவத் தலையீடு இருக்கக் கூடாது என பெரும்பாலானவர்கள் வேண்டுகோள் விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது .

### பொரலஸ்கமுவவில் விபச்சார விடுதி

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் விபச்சார விடுதி நடைபெறுகின்றதென சந்தேகத்தின் பேரில் சுற்றிவளைத்த காவல் துறையினர் மூன்று பெண்களை கைது செய்துள்ளனர்.

மசாஜ் சென்டர் என்ற பெயரில் இயங்கி வந்த இந்த நிலையத்தில் விபச்சாரம் நடப்பதாக கிடைத்த தகவலை அடுத்தே காவல்துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர்.

## The Sunday LEADER

### இலங்கைக்கு இறுதி எச்சரிக்கை பிரிதானியாவிலிருந்து

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றில் முன்னேற்றங்கள் காணப்படாது விடின் அதற்கெதிரான கடும் நடவடிக்கைகளில் பிரித்தானியா ஈடுபடும் என அறிவுறுத்தியுள்ளது.

''மேற் கூறிய இரு விடயங்களிலும் இலங்கையின் செயற்பாடுகள் மேம்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டுள்ள பிரித்தானியா தனது உரையில் மேலும் பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டின் போது பொது அமைப்புக்கள் உடனும் ஊடகங்கள் உடனும் சுதந்திரமான தொடர்பினை பொதுநலவாயத் தலைவர்கள் மேற்கொள்ளும் சாத்தியங்கள் காணப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு கிழக்கில் எதிர்வரும் செப்டம்பரில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் அமைதியாகவும், உண்மையானதும் நடுநிலையானதுமான தேர்தலாக நடைபெற வேண்டும்.'' என்றும் கரிசனை கொண்டுள்ளதாக பிரித்தானிய பாராளுமன்றத்தின் கீழ் இயங்கும் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாயத் துறையின் உதவி இராசாங்க செயலர் அலிஸ்டயர் பேர்ட் தெரிவித்துள்ளார்.

### ஐ.ம.சு.மு யும் ஐ.தே.க வும் தேர்தலின் பின்னரே பிரதம வேட்பாளரின் பெயரை வெளியிடும்

மேற்கூறிய இரு கட்சிகளும் பிரதம வேட்பாளரினைப் பெயரிடாமல் மூன்ற மாகாண சபைகளிலும் தேர்தலில் குதிக்க முடிவெடுத்துள்ளன என அவ்வக் கட்சிகளின் தேர்தல் குழுக்கள் அறிவித்துள்ளன.

### பெரும் அளவிலான சட்டவிரோத மருந்துகள் கைப்பற்றப்பட்டன

இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து மருந்துப் பொருள் மற்றும் அழகு சாதனப் பொருள் அதிகாரசபைப் பரிசோதகர்களும் காவல்துறையும் சுமார் 200,000 சட்ட விரோதக் குளிசைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இக்குளிசைகளுள் நித்திரைக் குளிசைகளும் உள்ளடங்கியிருக்கின்றன.

இவற்றைத் தனது வீட்டில் பதுக்கி வைத்திருந்த சந்தேக நபர் காவல்துறை விசாரணைக்க உட்படுத்தப் பட்டுள்ளார். விசாரணைகளின் போது அந் நபர் போதைமருந்துப் பாவனையாளனாகவோ அல்லது மருந்தக உரிமையாளராகவோ இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

அவ்வாறாயின் ஏன்? இவ்வளவு பெருந்தொகையான மருந்து வில்லைகளைத் தன்னகத்தே வைத்திருந்தார் என்பதே விசாரணையின் முக்கிய பகுதியாக இருப்பதாக காவல்துறை தெரிவித்துள்ளது. அத்துடன் எவ்வாறு இம் மருந்துப் பொருட்களை அவர் பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் அறியும் பொருட்டு விசாரணைகள் நடைபெறுகின்றன.

### 480 அபிவிருத்தித் திட்டங்களை அடையாளம் கண்டுள்ள — புறநெகும

புறநெகும திட்டத்தின் ஊடாக அடையாளம் காணப்பட்டுள்ள 480 அபிவிருத்தித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இறங்கியுள்ளது.

இத் திட்டத்திற்கென அடையாளம் காணப்பட்ட உள்ளூராட்சி அலகுகள் ஒவ்வொன்றிற்கும் சுமார் 50 மில்லியன் ரூபாய்கள் அடையாளம் காணப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றிற்காகவும் வழங்கப்படவுள்ளன.

இந்நிதி உதவியினை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### ஹெய்டியிலுள்ள இலங்கைப் படையின் சேவைகள் மெச்சத்தக்கவை

ஹெய்டியில் அமைதி காப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கைப் படையினரின் சேவை மெச்சத்தக்கதாக உள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைதி காப்புப் படைச் செயலகம் அறிவித்துள்ளது.

அங்கு பணியாற்றிய படையினருக்கான பதக்க அணிவிப்புப் பேரணியின் போதே இதனை அச் செயலக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இப் படையணியில் இலங்கைப் படையின் இராணுவ, கடற்படை, வான்படை அலுவலர்கள் செயலாற்றி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம்

1. மின் பகுப்பில் முலாமிடப்படும் உலோகத்தின் நிறையானது செலுத்தப்படும் மின்னோட்ட பருமனின் அளவிற்கும், செலுத்தப்படும் மின்னோட்ட நேர அளவிற்கும் நேர் விகிதசமனாகக் காணப்படும் என கண்டறிந்த விஞ்ஞானி யார்?
   1. பெஞ்சமின் பிராங்கிளின் 2. அலெக்சாண்டர் வோல்ற்றா
   3. மைக்கல் பரடே 4. ஜோர்ஜ் சைமன் ஓம்

2. ஒரு சோதனைக்குழாயில் சிறிதளவு நீரை இட்டு அதற்குள் தேங்காய் எண்ணெய் சிறிதளவு இட்டு $x$ எனும் இரசாயனப் பதார்த்தம் சேர்க்கப்பட்ட போது தேங்காயெண்ணெய் சிவப்பு நிறமாகக் காணப்பட்டது. இங்கு $x$ என்பது?
   1. அயடீன் 2. பையுரேற்று கரைசல் 3. சூடான் $III$ கரைசல்
   4. பெனடிக்கின் கரைசல்

3. காபனீரொட்சைட்டு வாயுவை தெளிந்த சுண்ணாம்பு நீரினுள் செலுத்தும் போது பால் நிறம் தோன்றுவதற்கும் பின்னர் பால்நிறம் மங்குவதற்கும் காரணமாக இரசாயனப் பதார்த்தங்கள் முறையே எவை?
   1. கல்சியம் ஒட்சைட்டும், கல்சியம் காபனேற்றும்
   2. கல்சியம் காபனேற்றும், கல்சியம் ஒட்சைட்டும்
   3. கல்சியம் இருகாபனேற்றும், கல்சியம் காபனேற்றும்
   4. கல்சியம் காபனேற்றும், கல்சியம் இருகாபனேற்றும்

4. மண்ணினுள் தரைக்கு சமாந்தரமாக வளரும் தண்டுகளில் உணவு சேமிக்கும் தாவரம் எது?
   1. மஞ்சள் 2. உருளைக்கிழங்கு 3. வெங்காயம்
   4. இன்னலக்கிழங்கு

5. ஒரு மின்கலனடுப்பில் வெப்பச்சுருளினது தடை $62.5\Omega$ களாகும். இவ்வடுப்பு 250 வோல்ற்று மின்வழங்களுடன் 3 நிமிட நேரத்திற்கு தொடுக்கப்பட்டது. அதிலிருந்து விடுவிக்கப்படும் வெப்பத்தின் அளவைக் காண்க.
   1. $12150\, j$ 2. $30000\, j$ 3. $180000\, j$ 4. $720000\, j$

6. $0.5moldm^{-3}$ செறிவுடைய $NaOH$ இன் $600\,ml$ கரைசலின் செறிவை $0.3moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?
   1. $200\,ml$ 2. $300\,ml$ 3. $400\,ml$ 4. $600\,ml$

7. பற்றீரியா பற்றிய சரியான கூற்று அல்லது கூற்றுக்கள் எவை?
   அ. திட்டமான கரு, கருமென்சவ்வு காணப்படாது
   ஆ. முதலுருவைச் சூழ பெப்ரிடோ கிளைக்கலனாலான கலச்சுவர் உண்டு
   இ. பிளவு மூலம் அல்லது துண்டாதல் மூலம் இனம்பெருகும்.
   1. அ சரி 2. அ,ஆ சரி 3. அ,ஆ,இ சரி 4. ஆ,இ சரி

8. உலோகம் ஒன்றின் அடர்த்தி $2400\,Kg$. அதன் கனவளவு $0.3m^3$ ஆகும். இவ்வுலோகத்தின் $1000Kgm^{-3}$ அடர்த்தி கொண்ட திரவத்தினுள் முழுமையாக அமிழ்த்தும் போது தோற்ற நிறை யாது?
   1. $2040\,N$ 2. $2400\,N$ 3. $4200\,N$ 4. $3300\,N$

9. கீழ்வருவனவற்றில் பிழையான கூற்று எது?
   1. 1ம் கூட்ட மூலகங்களை விட 2ம் கூட்ட மூலகங்களின் உலோக இயல்பு குறைவு
   2. $Na$ ஐ விட $K$ உலோக இயல்பு கூடியது.
   3. கூட்டத்தின் வழியே செல்லும் போது அணுவாரை அதிகரிப்பதால் சேர்வைகளை உருவாக்கும் திறன் அதிகம்.
   4. ஆவர்த்தனம் வழியே கருக்கவர்ச்சி விசை குறைவடையும்

10. பழங்களுக்கு விசிறி வெட்டுப்படை உண்டாவது தாமதப்படுத்தப்படுவதன் மூலம் பழம் வருவதை தாமதப்படுத்தும் ஓமோன் எது?
   1. $IAA$ 2. $NAA$ 3. $2,4-D$ 4. $BST$

### சென்ற வார விடைகள் - விஞ்ஞானம்

$I$

1. ஒளிச்சக்தி, வெப்பசக்தி
2. பச்சைத்தாவரங்கள் சூரியஒளி முன்னிலையில் நீரையும், $CO_2$ வையும் பயன்படுத்தி குளுக்கோசு தயாரிப்பதே ஒளித்தொகுப்பு ஆகும்.
3. சூரியசக்தியை பச்சையம் பெற்றுக்கொள்கிறது. $CO_2$ வாயு இலைவாயினூடு பச்சையவுருமணியை சென்றடைகிறது. வேர்மயிரினால் மண்நீர் உறிஞ்சப்படுகிறது.
4. $6CO_{2(g)} + 6H_2O_l \rightarrow C_6H_{12}O_{6(s)} + O_2$
5. சமாந்தர நரம்பமைப்பையும், வலையுரு நரம்பமைப்பையும் கொண்டு காணப்படுவதால்
6. ஈரப்பதன், ஒளிச்செறிவு, காற்று, பண்நீரினளவு
7. சவுக்கு
8. ஏற்கனவே தொகுக்கப்பட்ட மாப்பொருளை அகற்றுவதற்கு
9. எதனோல்
10. வளியிலுள்ள $CO_2$ வை உள்ளெடுத்து $O_2$ வை வெளியேற்றுவதனால் சூழலில் வாயு சமனிலை பேணப்படுகிறது.

$II$

1. $NaOH$
2. காரம்
3. அயன் பிணைப்பு
4. $NaOH + Hcl \rightarrow Nacl + H_2O$
5. தாவர அல்லது விலங்குக் கொழுப்பு
6. வன்னீரில் காணப்படும் $Ca^{2+}, Mg^{2+}$ என்பவற்றுடன் கொழுப்பமிலங்கள் கரையுந் தன்மையில்லாத உப்புக்களை தோற்றுவிப்பதனால் ஆகும்.
7. பல் பொஸ்பேற்று அயன்கள்
8. விலங்குக் கொழுப்பு - ஸ்தியரிக்கமிலம்
   தேங்காயெண்ணெய் - லோரிக்கமிலம்
9. எண்ணெய்த் தன்மையான அழுக்குகளில் சவர்க்காரத்தின் வாற்பகுதி இணைந்துவிடும். தலைப்பகுதி நீரை நோக்கி காணப்படுவதால் எண்ணெய் சிறுதுளிகளாகப் பிரிக்கப்பட்டு குழம்பாக்கப்பட்டு நீரில் மிதக்கும்.
10. இளஞ்சிவப்பு

$III$

1. $Si, Ge$
2. கட்மியம் சல்பைட்டு
3. வில்லியம் சொக்கி, வோல்ட்டர் பிறட்டன், யோன் பர்டின்
4. ஆடியாக தொழிற்படல், விரியலாக்கியாக தொழிற்படல்
5. வலுப்பொறி
7. கதோட்டு கதிர் அலைவுகாட்டி

$IV$

1. $A-$ மின்காந்த அலை
   $B-$ மட்பிசைத்தல்
   $C-$ விரியலாக்கி
   $D-$ கேள் மீடிறன் அலை
   $E-$ வானொலி மீடிறன் விரியலாக்கி
2. கேள் மீடிறன் அலையையும் மின்காந்த அலையையும் கலத்தல்
3. வீச்சு மட்டிசைப்பு, மீடிறன் மட்டிசைப்பு
4. நுணுக்குப் பன்னி $\Rightarrow$ ஒலிச்சக்தி $\Rightarrow$ மின்சக்தி
   செவிப்பன்னி $\Rightarrow$ மின்சக்தி $\Rightarrow$ ஒலிச்சக்தி

### பாடம் - கணிதம்

1. யாதாயினும் ஒரு நேர்கோட்டின் பொது வடிவம் $\frac{2y}{3} = \frac{x}{6} + 1$ எனின், இதனை $ax + by + c = 0$ எனும் வடிவில் தருக.

2. ரூபா 75000 பெறுமதியுள்ள ஒரு தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றை ஆரம்பத்தில் 15000 செலுத்தி மிகுதியை ரூபா 4150 வீதம் 15 சமமாத கட்டணமாக செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்.
   அ. மாத அலகுகளின் எண்ணிக்கை?
   ஆ. செலுத்திய மொத்த வட்டி எவ்வளவு?

3. பின்வரும் சூத்திரங்களை எழுவாய் மாற்றம் செய்க
   அ. $V = U + at \quad (t)$ ஆ. $\frac{1}{f} = \frac{1}{v} + \frac{1}{u} \quad (V)$
   இ. $a^2 + 2ac = b^2 + d$

4. சுருக்குக $\frac{-2}{(b-a)} + \frac{3}{(a-b)}$

5. ஒரு நீர்தொட்டி முற்றாக நிரப்பப்பட்டிருந்தது. அதிலிருந்து $1/3$ பங்கை முதல் பாவித்தும் இரண்டாம் நாள் $1000l$ நீரை பாவித்ததன் பின்னர் மிகுதியாக $5/8$ பங்கு நீர் காணப்பட்டது எனின், அத்தாங்கியின் முழுக் கனவளவு யாது?

6. ஒரு தந்தையின் வயது மகனின் வயதிலும் 6 மடங்கிலும் 1 கூட. 11 வருடங்களின் பின்னர் அவர்களின் வயதுகளுக்கிடையிலான விகிதம் 12:5 எனின், தந்தையின் தற்போதய வயது யாது?

7. 6, 10, 14, 18....... எனும் விருத்தியில்
   அ. பொது உறுப்பைக் காண்க
   ஆ. முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?

8. சுருக்கி நேர்ச்சுட்டியில் தருக. $\frac{a^3 \times 4a^{-2} \times b^3}{3a^5 \times b^0 \times b^2}$

9. காரணி அறிவைப் பயன்படுத்தி சுருக்குக. $\sqrt{16.25 \times 15.75 + 0.25}$

10. காரணிப்படுத்துக. $4a^3 - 32a$

### சென்ற வார விடைகள் - கணிதம்

$I$

1. $\frac{225000}{25} = 9000$ ரூபா
2. $\frac{20}{100} \times 9000 \times \frac{1}{12} = 150$
3. $\frac{25 \times 26}{2}$
4. $325 \times 150 = 48750$
5. $9000 + \frac{48750}{23} = 10950$

$II$

1. $3(a^2 - 9) = 3(a-3)(a+3)$
2. $\sqrt{(50+2.5)(50-2.5)+2.5^2} = 50$
3. $\sqrt{3 \times 36} = 6\sqrt{3} = 6 \times 1.732 = 10.392$
4. $\frac{1+8}{9 \times 2 \times 3} = \frac{1}{6}$

$III$

1. $4x = \frac{x+28}{2} \Rightarrow x = 4$
2. செவ்வகத்தின் பரப்பளவு - $x \times y = 150$
   சதுரத்தின் பரப்பளவு - $(x-3)(y+2)$
   $xy = 150$
   $(y+5) \times y = 150$
   $(y-10)(y+15) = 0$
   $\therefore x = 15, y = 10$
3. $12 \times 12 : 150 \Rightarrow 144 : 150 \Rightarrow 24 : 25$

$IV$

1. $11/36$
2. $10/36$
3. $14/36$

**கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர் குழு,**
**குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியன்குளம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பாடம் – வரலாறு

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

பின்வரும் விகாரைகளைக் கொண்டு 1-3 வரையிலான வினாக்களுக்கு விடை தருக

A – தூபாராம B – அபயகிரி C – ரன்கொத்

D – கடலாதெனிய E – லங்காதிலக F – கிரிவிகாரை

G – ஜேத்தவனாமய H – விஜயசுந்தராமய J – ருவன்வெலிசாய

K – தம்புள்ள L – மிரிசவட்டிய

1. பொலநறுவை இராசதானிக்குரிய விகாரைகள் அடங்கும் தொகுதி
1.AC 2.BF 3.CF 4.JC

2. துட்டகைமுனு மன்னனால் அமைக்கப்பட்ட விகாரைத்தொகுதி
1.AD 2.BC 3.FC 4.LJ

3. இந்து சமயத்தின் செல்வாக்கை கொண்டுள்ள விகாரை
1.DE 2.CF 3.DC 4.FC

4. லம்பகர்ண வம்சத்தின் தொடக்க ஆட்சியாளன்
1. தாதுசேனன் 2. வசபன் 3. மகாசேனன் 4. துட்டகைமுனு

5. கீழே தரப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய ஆட்சியாளனைத் தருக.
- இலங்கையை அதிககாலம் ஆட்சி செய்தல்
- நகரகாவலுக்கு நகர குத்திக பதவி ஏற்படுத்தல்
- ஆரிய குழுக்களை ஒன்றிணைத்தல்

1. துட்டகைமுனு 2. எல்லாளன் 3. காவன்தீஸன் 4. பண்டுகாபயன்

6. இந்தியாவில் ஆரியர் முதலில் குடியேறிய பிரதேசம்
1. சிந்து 2. கங்கை 3. ஆப்கானிஸ்தான் 4. தக்கிணம்

7. மகதத்தை ஆண்ட முதல் மன்னன்
1. அஜாசத்துரு 2. காலாசோகன் 3. பிம்பிசாரன் 4. பிந்துசாரன்

8. கீழ்குறிப்பிடப்படும் விடயங்களுடன் தொடர்புடைய குப்த பேரரசன்
- பிராமணர்களுக்கு 'பசுக்களை' தானமாக வழங்கல்
- அஸ்வமேதயாகம் செய்தல்
- மிகப்பலம் வாய்ந்த ஆட்சியாளன் என புகழ் பெறல்

1. 1ம் சந்திரகுப்தன் 2. சமுத்திரகுப்தன் 3. 2ம் சந்திரகுப்தன்
4. குமாரகுப்தன்

9. மகதத்தின் தலைநகரான ராஜகிருகத்தை கைவிட்டு பாடலிபுரத்தை தெரிவு செய்த மன்னன்
1. பிம்பிசாரன் 2. அஜாசத்துரு 3. அசோகன் 4. சமுத்திரகுப்தன்

10. அஜந்தா குகை ஓவியம் சிறப்பு பெற்ற காலம்
1. மௌரியர் 2. குப்தர் 3. குஷாணர் 4. நந்தர்

11. ஆரியர் இலங்கையின் கிழக்குப் பகுதியில் அமைத்துக் கொண்ட குடியேற்றம்
1. தீககம, உபதிஸ்ஸகம 3. மஹாகம, தீககம
2. உபதிஸ்ஸகம, அனுராதகம 4. தீககம, விஜிதபுர

12. கீழ் குறிப்பிடும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னன்
- சோழரிடம் இருந்து நாட்டை விடுவித்தல்
- முதன் முதலில் மகாதீத்த துறைமுகத்தில் காவலரண் அமைத்தல்
- பாண்டிய நாட்டுடன் திருமண உறவை ஏற்படுத்தல்

1. 1ம் பராக்கிரமபாகு 2. நிஸ்ஸங்கமல்லன் 3. மகாசேனன் 4. 1ம் விஜயபாகு

13.

| | |
|---|---|
| 1. அசேலன் | A. 1ம் இராஜஇராஜசோழன் |
| 2. வங்கநாஸிகதிஸ்ஸன் | B. கரிகாலச்சோழன் |
| 3. மித்தசேனன் | C. ஸ்ரீமாற ஸ்ரீபல்லவன் |
| 5ம் மகிந்தன் | D. எல்லாளன் |

மேற்படி ஆட்சியாளர்களுக்கு எதிராக படையெடுத்த அந்நியர்களின் ஒழுங்கு
1.ACDB 2.DBCA 3.DCBA 4.CDBA

15. இறந்த விலங்குகளை புதைக்கும் இடமாக எனது வயிற்றை வைத்திருக்க விரும்பவில்லை என கூறி மாமிசத்தை ஒதுக்கிய மன்னன்
1. அசோகன் 2. எல்லாளன் 3. அக்பர் 4. கனிஷ்கன்

16. டில்லி சுல்தான் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த பிரதான விடயம்
1. தலைநகர் வேதகிரிக்கு மாற்றப்பட்டமை
2. இந்துக்களின் எதிர்ப்பை ஆட்சியாளர்கள் பெற்றமை
3. பாபர் மன்னனின் படையெடுப்பு
4. பலவீனமான ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடம் ஏறியமை

17. கோட்டை இராசதானி காலத்தில் இலங்கை வந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக் கூடிய விடயம்
A – கடலாதெனிய , லங்காதிலக விகாரை அமைப்பு
B – சப்புமல்குமாரய ஆரியசக்கரவர்த்திகளின் ஆதிக்கத்தை ஒழித்தல்
C – வெஸ்ட வோல் உடன்படிக்கை இடம்பெறல்
D - ஸ்பில்பேர்கன் இலங்கை வருகை

1.AC 2.BD 3.CD 4.AB

ஆசிரியர் :
**த.அகிலன்**, Dip. in Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 25

பிரதீபா

1. மாம்பழம், பப்பாசிப் பழம், வாழைப்பழம் என்பவற்றில் அதிகமாக இருப்பது எது?
1. உயிர்ச்சத்துக்கள் 2. புரதம் 3. கொழுப்பு
2. "மூளைக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காக எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பக்கல்வி மாணவர்களிற்கு தடுப்பூசி ஏற்றப்படும்" இது எவ்வகையைச் சார்ந்தது?
1. துண்டுப்பிரசுரம் 2. அறிவித்தல் 3. அறிவுறுத்தல்
3. பொருத்தமான சொற்கூட்டத்தின் கீழ் கோடிடுக.
1. சோளம், கத்தரி, மிளகாய் 2. சேம்பு, பலா, மா, கித்துள்
2. தென்னை, பனை, கமுகு, வாழை
4. "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல" இதற்கான சரியான கருத்தைத் தருவது எது?
1. எதிர்பார்த்த ஒன்று தானாகவே கிடைத்தல்
2. துன்பத்துக்கு மேல் துன்பம்
3. ஒரு செயல் செய்ய இன்னொரு விளைவு ஏற்படல்
5. கமலின் சகோதரன் விமல். விமலின் தாயாரின் சகோதரன் நிமல். நிமலின் மகள் சரணியா. சரணியாவின் சகோதரன் குமார். குமார் கமலுக்கு என்ன உறவு முறை?
1. சகோதரன் 2. மைத்துனன் 3. மகன்



6. இவ் இலட்சனையின் பெயர் யாது?
1. உலக சாரணிய சின்னம் 2. விமானப்படை
3. இலங்கை சாரணிய சின்னம்
7. மரக்குற்றி எனும் சொல் சரியாகப் பிரித்தெழுதப்பட்டுள்ள முறை யாது?
1. மர + குற்றி 2. மரம் + குற்றி 3. மரக் + குற்றி
8. தொற்றுநோயைக் காட்டுவதற்கு பயன்படுத்தும் வர்ணம் யாது?
1. நீலம் 2. மஞ்சள் 3. பச்சை
9. அதிகளவு நீரை விரும்பும் பயிர் எது?
1. நெல் 2. மா 3. எள்
10. கோள் மண்டபத்தில் மிகவும் பெரிய கோள் எது?
1. வியாழன் 2. புவி 3. செவ்வாய்
11. சவர்க்காரம் எந் நீரில் விரைவாகக் கரையும்?
1. மழைநீரில் 2. உவர் நீரில் 3. ஆற்று நீரில்
12. பின்வருவனவற்றுள் எதன் முட்டை மென்மையான சவ்வினால் ஆனது?
1. ஆமை 2. கிளி 3. பல்லி
13. பருமனில் மிகச் சிறிய அளக்கும் அலகு பின்வருவனவற்றுள் எது?
1. சென்ரி மீற்றர் 2. மீற்றர் 3. மில்லி மீற்றர்
14. இலங்கைக்கு வடக்கே உள்ள நாடு எது?
1. பாக்கிஸ்தான் 2. மாலைதீவு 3. இந்தியா
15. (8,3,6,5) எனும் இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகக் கூடிய மற்றும் மிகக் குறைந்த எண்கள் முறையே
1. 8653, 3568 2. 8635, 8653 3. 3568, 8653
16. 1500மிலீ கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 900மிலீ நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 900மிலீ நீரைக் கவனமாகஊற்றும் போது பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரின் அளவு யாது?
1. 900மிலீ 2. 300மிலீ 3. 600மிலீ
17. 6000 ரூபாவின் $3/4$ பங்கானது 2000 ரூபாவின் $1/4$ பங்கிலும் எவ்வளவு ரூபா கூடுதலானது?
1. ரூபா 4000 2. ரூபா 5000 3. ரூபா 2000
18. 210 தோடம்பழங்களை 3 பெட்டிகளில் சமனாக அடுக்கினால் இரு பெட்டியில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?
1. 140 2. 420 3. 70
19. கமலன் வைத்திருந்த 56 மாம்பழங்களில் அரைப் பங்கினை தம்பிக்குக் கொடுத்தான். மிகுதியில் கால் பங்கினை தனது நண்பனுக்குக் கொடுத்தான். தற்போது அவனிடம் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
1. 6 2. 21 3. 14

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## றிங்கோ ஸ்ரேசனர்ஸ் வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

கடந்தவார விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. 3 | 2. 3 | 3. 3 | 4. 3 | 5. 2 | 6. 2 | 7. 2 | 8. 3 |
| 9. 3 | 10. 3 | 11. 2 | 12. 1 | 13. 2 | 14. 3 | 15. 3 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திருந்திய உள்ளம்

(மார்க்கச் சிறுகதை)

சனா காதல் திருமணம் தான் செய்து கொண்டாள். சனாவின் கணவர் சபிப் தன் மனைவி சனாவை வீடு வாசல் நகை நட்டு இல்லாமல் தான் எடுத்துக் கொண்டான்.

அவன் ஒரு பெரிய வியாபாரி அதாவது பிஸினஸ் மேன் என்று தான் கூற வேண்டும்.

சனா வீட்டில் இரண்டாவது பெண் பிள்ளை. சனாவின் குடும்பம் ஒரு நல்ல குடும்பமும் படித்தவர்களும் மார்க்க பற்றும் நிறைந்து தான் காணப்பட்டார்கள்.

அதற்கு எதிர்மாறான குடும்பம் தான் சபிப்பின் குடும்பம். பணக்காரர் என்ற நினைப்பு. ஊரிலே அவர்களை விட்டாள் வேறு யாரும் இல்லை.

பணம் எதையும் செய்யும் அல்லவா? சபிப்பின் தாயார் சகோதரர்கள் எல்லோரும் இப்படியான பெரும் நினைப்பிலேயே வாழ்ந்தார்கள். இதற்கு எதிர்மாறானவர் சபிப்பின் தகப்பனார். அவர் இஸ்லாத்தில் பற்றுடையவரும் ஏழைகளோடு இரக்கமாகவும் மிகவும் இபாபத் உய்யவர் ஆகவும் காணப்பட்டார்.

சனா மாமியாருடன் அவர்களது வீட்டில் தான் இருந்தாள். மாமியார் சொல்லும் எல்லா வேலைகளையும் செய்வாள். மாமிக்கு அடிமை என்றும் கூறலாம். மாமியின் சொல்தான் அவளுடைய வாழ்க்கை ஆகியது என்றே கூறலாம்.

சனா காலை முதல் இரவு படுக்கைக்குச் செல்லும் வரை தொடர்ந்து ஏதேனும் ஒரு வேலையைக் கொடுத்துக் கொண்டே இருப்பாள் அவள் மாமியார். தன் கணவனோடு கதைப்பதற்குக் கூட அவளுக்கு நேரம் கிடைப்பதில்லை. இவை எதனையும் கணவன் கண்டுகொள்வதாக இல்லை. அவன் சரியான ஒரு தாய் சொல் கேட்கும் பிள்ளை.

நாட்கள் ஒரு வருடமாக உருண்டோடியது. சனாவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு அழகான பெயர் சூட்ட வேண்டும் என்றெல்லாம் கற்பனை செய்தாள். சனாவின் பெற்றோர் தன் மகளின் பிள்ளைக்கு அழகான பெயர் சூட்ட வேண்டும் என்று சில பெயர்களை அனுப்பி வைத்தார்கள். சைனப், றுக்கையா, கதிஜா, பாத்திமா..... அதை பார்த்த சனாவின் மாமியார், கோபத்துடன் கத்தத் தொடங்கினாள். "இவர்கள் எல்லாம் நாகரீகம் என்றால் என்ன என்று தெரியாமல் இருக்கிறார்கள். இவர்களிடத்தில் போய் பெண் எடுத்தியே! அது நான் விட்ட தவறுதான். இந்தா பாரு சபீப் நா சொல்றது தான் இங்கே நடக்கணும். போய் பிள்ளைக்கு சூட்டி என்று பெயர் வைத்துவிட்டு வா. இல்லைண்டா அவ உம்மா வீடு போகட்டும்." தாய் கூறி முடிப்பதற்குள் தங்கை குறுக்கிட்டாள், "அவ உம்மா வீட்ட போனா யார் இந்த வீட்டு வேலையெல்லாம் செய்வது?"

சனா சற்றுப் பயந்து நடுங்கினாள். தன் கணவர் தன் பேச்சு கேட்பது இல்லையே! தன் மனைவியென்று ஒரு துளி கூட மதிப்புக் கொடுப்பதில்லையே! என்று தன் மனதிற்குள் நொந்து போனாள். காலம் யாருக்குத்தான் காத்திருந்தது. தனது மகளின் ஒரு வயது பூர்த்தியை சாதாரணமாகவே கொண்டாடலாம் என தன் கணவனிடம் கூறினாள் சனா. இது என் தாய் எடுக்கும் முடிவில் தான் உள்ளது என பட்டென்று பதில் கூறினான் சபீப். சனாவின் மகள் சூட்டிக்கு கோலாகலமாக பிறந்தநாள் வைபோகம் நடந்து முடிந்தது. இதை முற்றிலும் சனாவின் குடும்பம் வெறுத்தது. என்ன செய்யலாம் சனா வாய் இருந்தும் மௌனமானாள்.

காலம் சில கழிந்தது. சனாவின் மாமியார் ஆதிக்கம் கூடிக் கொண்டே போனதுஇ சனாவின் மாமியாரோ தன் கணவனை மதிப்பது இல்லை. ஏன் தெரியுமா! அவருக்கு மார்க்கப் பற்று அதிகம் இருப்பதால் தான் அவர் சொல் கேட்பதும் இல்லை அவரை மதிப்பதும் இல்லை. தன் மனைவியை நினைத்து இறைவனிடம் கையேந்தாத நாள் இல்லை என்றே கூற வேண்டும். அவர் இறைவனிடம் பாரத்தை போட்டுவிட்டார். மனிதன் எப்படியும் ஒரு நாள் திருந்தித் தானே ஆக வேண்டும்.

தொடரும்.......

## றமழானே நீ வருவாய்

ரமழானே நீ வருவாய்
மானுடர் நெஞ்சத்தில்
மாற்றத்தை நீ தருவாய்

வாழ்நாளில் சுஜுத்
செய்யாத நெற்றிகள் - கூட
தராவீஹ் எனும் பெயரில்
தலை வணங்கப் போகின்றன
ரமழானே உன் நல்வரவால்

தொலைக்காட்சிக்கும்
பாவச் செயல்களுக்கும்
ஒரே ஒரு மாதம் மட்டும்
விடுமுறை வழங்கப்பட
விருக்கிறது
ரமழானே உன் இனிய வரவால்

உன்னால் மாறிய
உள்ளங்கள் இனி
மாறாமலே இருக்க
மன்றாடுகிறேன் அல்லாஹ்வை!

அளவில்லா இபாதத்துக்கள்
குறைவில்லா தானதர்மங்கள்
என்றுமே இல்லாத இறையச்சம்
தெளிந்த நீரோடை போல்
இதயம் - ரமழானே
இவையெல்லாம் நீ தந்த
அருட்கொடைகள்

மாறிடுவோம் - நாம்
இந்த ரமழானிலிருந்தேனும்
எம்மை மாற்றிடுவோம் - நாம்

கே.பீ.எ.ஹாபிழ்
மூதூர்




## ஒரு கணம் சிந்தித்துப் பார்

- நீ எங்கிருந்தாலும் அல்லாஹ் உன்னை பார்த்துக் கொண்டிருக்கின்றான். நீ பேசுபவைகளை செவிமடுக்கின்றான் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ பேசக்கூடியவைகள், செய்யக் கூடியவைகள் யாவற்றையும் அல்லாஹ்வின் வானவர்கள் பதிவு செய்கிறார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ தவறு செய்வதற்கு முன் மரணத்தையும், ஸ்கராத்துடைய வேதனையையும் கப்ரையும், மறுமை நாளையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- மறுமை நாளில் உனது உடல் உறுப்புக்கள் அனைத்தும் உனக்கு எதிராக சாட்சி சொல்லும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப்பார்!
- தவறு செய்தால் அதற்காக கப்ரிலும், மறுமையிலும் கைசேதப்பட வேண்டுமே என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ தவறு செய்து விட்டால் மறுமை நாளில் எல்லா படைப்பினங்களுக்கு முன்னிலும் நீ கேவலப்படுத்தப்படுவாய் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ தவறு செய்வதற்கு முன் நான் இந்தத் தவறைச் செய்துவிட்டால் மறுமை நாளில் மஹசர் மைதானத்தில் எனக்கு அருகாமையில் சூரியன் கொண்டுவரப்படும். அப்போது நான் வியர்வையால் மூழ்கடிக்கப்படுவேனே என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ தவறு செய்து விட்டால் மறுமை நாளில் உனது முகம் கறுத்த நிலையில் நீ எழுப்பப் படுவாய் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!

எம்.ஆர்.ஸஸ்னி ஹுசைன்

**நீ யாரை போல திறமை மிக்க நேர்மையான மனிதனாக விரும்பு கிறாயோ அவரை உன் மனதிலே படம் பிடி அவ்வெண்ணமே உன் உயர்வுக்குப் போதுமானது.**

**— எல்பர்ட் —**

**நல்ல யோசனையை கேட்பது நமது திறமையை அதிகப்படுத்தும்.**

**— கதே —**

**சிரிப்பு ஒன்று தான் மனிதனை மிருகத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.**

**— எடிசன் —**

## பிள்ளைகளின் நட்பில் பெற்றோரின் பங்கு

நட்பு என்பது அனைவருக்கும் அவசியமான மனித இயல்பாகும். ஒரு மனிதனின் வாழ்த்தை அவனுடைய நடத்தை மற்றும் முன்னேற்றத்தில் நட்பு முக்கிய பங்கு வகிக்கின்றது.

நட்பு பற்றியும் நண்பர்கள் தொடர்பாகவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன் மொழிகள் பேசுகின்றன. மரணத் தறுவாயில் நபியவர்களின் இறுதி வார்த்தை கூட அல்லாஹ்வே என்னை மன்னிப்பாயா! என் மீது கருணை காட்டுவாயாக! உயர்ந்த நண்பனுடன் என்னைச் சேர்த்து வைப்பாயாக! (ஸஹீஹுல் புகாரி) என்பதாக இருந்தது. இவ்வார்த்தையை நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் இவ்வுறுதி மொழிகள் நட்பின் முக்கியத்துவத்திற்கு ஒரு சான்று என்று கூறலாம். ஒரு மனிதனின் வாழ்வில் அவனது குடும்பம் முக்கியத்துவம் பெறுவது போல் நண்பர்களும் அதிகமான தாக்கத்தைச் செலுத்துகின்றனர்.

பெற்றோரும் வீட்டுச் சூழலும் நன்றாக அமையப் பெற்று மாணவர்கள் கூட மோசமான நண்பர்களின் தொடர்புகளால் தங்களின் வாழ்வைத் தொலைத்து விடுகின்ற அவல நிலைகளும் ஏற்படுவதுண்டு.

எனவே நல்ல நட்புகளை தமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதும் அவற்றைத் தொடர்ந்து அவதானித்து வருவதும் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்திற்கு பெற்றோர் செய்யும் சிறந்த பங்களிப்பாகும்.

### நட்பின் அவசியம் பற்றி...

- பள்ளிப் பருவத்திலிருக்கும் ஒரு குழந்தைக்குக் கிடைக்கும் நட்பு தன்னோடுள்ள சக நண்பர்களுடன் விளையாட்டில் ஈடுபட வைப்பதோடு நின்று விடுவதில்லை. நற்பண்பாடு ஆரோக்கியம், மனவெழுச்சி என்பவற்றைக் கட்டியெழுப்பு வதிலும் அது தாக்கம் செலுத்துகின்றது.
- நட்பை இழந்த குழந்தைகள் அன்பு அன்பு மற்றும் அறிவியல் ரீதியான வறுமையால் விளையும் நெருக்கீடுகளால் அவதியுறுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.
- நண்பர்களுடன் இணைந்து மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளினூடாக பிள்ளைகள் பிறருடன் தொடர்பு கொள்ளும் முறை பரஸ்பரம் உதவி செய்தல் மற்றும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற வாழ்க்கைத் திறன்களைக் கற்றுக் கொள்கின்றனர். இன்னும் பல்வேறு மட்டங்களிலுள்ள சமூக அங்கத்தினருடன் தொடர்பு கொள்ளவும் தேவையான வழிமுறைகளையும் கற்றுக் கொள்கின்றனர்.
- நட்பினூடாக பிறருக்கு அன்பு காட்டவும் பிறரின் அன்பை மதிக்கவும் அவர்கள் பயிற்றப்படுகின்றனர்.
- சிறுவர்களின் கற்றலின் நட்பு ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. யதார்த்த பூர்வமான நட்பினூடாக இன்பத்தைச் சுவைக்கும் ஒரு குழந்தை பாடசாலைக்குச் செல்வதிலும் பாடங்களைக் கற்பதிலும் அதிக ஆர்வம் கொள்வதுடன் கல்வியில் உயர் தேர்ச்சியடைவதற்கு பரஸ்பரம் உதவி செய்வதிலும் ஆர்வம் செலுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உல்லாச விருந்தி. . .**

இடையே மோதலாக வெடித்துள்ளது.

இம் மோதலில் அவ்விரு உல்லாசப் பயணிகளும் தாக்குதலுக் குள்ளாகியதால் காயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். பெண் உல்லாசப் பயணியின் கண்களில் தாக்குதல் நடாத்தப்பட் டிருந்ததால் அவர் உடனடியாக கொழும்பு வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இம் மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் பணியில் தீவிரமாகச் செயற்பட்ட காவல்துறை, சந்தேகத்தின் பேரில் ஏழு பேரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியுள்ளனர்.

## திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முஸ்லிம்கள் புறக்கணிப்பு

முஸ்லிம்களைப் புறக்கணித்துவிட்டு திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டமை கண்டிக்கத்தக்க விடயமாகும் என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை வழமைக்கு மாறாக மாலை 3.00 மணிக்கு நடத்தியமையானது ரமழான் மாத காலத்தில் முஸ்லிம்களை திட்டமிட்டு புறக்கணித்த ஒரு செயலாகும்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் ஒரு முதலமைச்சர், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்கள் மூவர், ஐந்து உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் எனப் பல முஸ்லிம்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் புனித ரமழான் மாத நோன்பு நோற்றிருந்த வேளையில் நோன்பு திறப்பதில் சங்கடங்களை ஏற்படுத்தும் வகையில் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டமை மிகுந்த வேதனையைத் தருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். எனினும் இவர்களைச் சிறிதளவேனும் கணக்கிலெடுக்காது இந்த அரசாங்கம் செயற்படுகின்றமைக்கு இதனைத் தவிர வேறு ஆதாரங்கள் எவையும் தேவையில்லை.

இது குறித்து முஸ்லிம்கள் சிந்தித்து செயற்பட வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். இந்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப். ஏ. மஜீத் இருக்கின்றார். எனினும், அவருடன் கலந்துரையாடாது அவரைப் புறக்கணிக்கும் வகையில் இந்த கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டமை மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

அன்றைய தினம் மாலை 7.00 மணி வரை இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது. சகல முஸ்லிம் அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் இப்தாருக்காக இடையில் வெளியேறிவிட்டனர். எனினும், முஸ்லிம்கள் எவரும் இல்லாத நிலையில் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

அங்கு என்ன பேசப்பட்டது, என்ன தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்ற விபரம் முஸ்லிம்கள் யாருக்கும் தெரியாது. எனவே, இந்த அரசாங்கத்திற்கு முஸ்லிம்களில் சிறிதளவேனும் அக்கறையில்லை என்பது இதிலிருந்து புலனாகின்றது.

"முஸ்லிம்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கிறோம்" என்று அடிக்கடி மார்தட்டிக் கொள்ளும் முஸ்லிம் காங்கிரஸுக்கு இதெல்லாம் முஸ்லிம்களின் உரிமை மீறலாகத் தெரிவதில்லை. அவர்கள் இது குறித்து இதுவரை வாய் திறக்கவே இல்லை. என்பதும் எம்மை மேலும் சிந்திக்க வைத்துள்ளது.

எனவே, இது போன்ற விடயங்களை வடக்கு, மத்திய, வடமேல் மாகாண முஸ்லிம்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் காலங்களில் இதற்கு பாடம் கற்பிக்கும் வகையில் செயற்பட வேண்டும்" என அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பெருந்தெரு

## விக்னேஸ்வராவிற்கு நிரந்தர அதிபர்

பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் 21.12.2012 தொடக்கம் தற்காலிக அதிபர் பொறுப்புக்களை ஏற்று நடாத்திய திருமதி.ஐ.எம்.முரளிதரன் அவர்கள் நிரந்தர அதிபராகத் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இப்பாடசாலை வரலாற்றில் முதல் பெண் அதிபர் என்ற பெருமையும் இவரையே சாரும். அத்துடன் இவரின் தலைமையிலும் வழிகாட்டலிலும் பாடசாலையில் நடைபெற்ற "சீனிமீனி" செயற்திட்டம் (நீரிழிவு நோய்க்கு எதிரான செயற்பாடு) அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து இச்செயற்திட்டத்திற்கு தி/ பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், தி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளும் பங்கு பற்றின. இச்செயல்திட்டம் றோட்டரிக் கழக அனுசரனையுடன் நடைபெற்றது.

2012ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற 6S-3R செயற்திட்டத்திலும் இப்பாடசாலை அகில இலங்கை ரீதியில் முதலாமிடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## இருக்கைகள் அன்பளிப்பு

யேசு அழைக்கிறார் அமைப்பு திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி விளையாட்டுப் பிரிவுக்கு ஒரு தொகுதி கதிரைகளை அன்பளிப்பாக வழங்கி வைத்துள்ளனர். புதன்கிழமை 24.07.2013 காலை இவ் அமைப்பின் போதகர் சுதாகரன் போல் அவர்களும், அ.றொபேர்ட் எடிசன் ஆகியோர் இதனை அதிபர் செ.பத்மசீலனிடம் கையளித்தனர். மத்தியில் விளையாட்டு பொறுப்பாசிரியர் சி.சசிகுமார் நிற்பதையும் படத்தில் காணலாம்.



சுதந்திர ஊடகத்தின் மீது தொடரும் அழுத்தங்கள்

## ஊடகவியலாளரின் வீட்டின் மீது தாக்குதல்

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள பிராந்திய ஊடகவியலாளரொவருரின் வீடு இனந்தெரியாதோரினால் கடந்த வியாழக்கிழமை இரவு தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

ஊடகமொன்றில் வெளியான செய்தியினை அடுத்தே இவரின் வீடு தாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதலை மலைமுரசு வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளை முஸ்லிம் மீடியா போரமும் தனது கண்டனத்தை அறிக்கையிட்டுள்ளது. அவ்வறிக்கையில் "பிராந்திய ஊடகவியலாளரின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்ட சூத்திரதாரிகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். குறித்த ஊடகவியலாளரினால் ஊடகமொன்றிற்கு எழுதப்பட்ட செய்தியினைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக அறிய முடிகின்றது.

எனினும் இந்த செய்தியில் ஏதாவது பிழைகள் காணப்பட்டின் உரிய ஊடக நிறுவனத்துடன் பேச்சு நடத்தி மறுப்பு செய்தி வெளியிட்டிருக்க முடியும். இதனை விட்டு ஊடகவியலாளரின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த சம்பவத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வன்மையாக கண்டிப்பதுடன் பின்னணியில் உள்ளோரை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். இதன் காரணமாக எதிர்காலத்தில் இதுபோன்று போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க முடியும்" என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### "மலைமுரசும் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது"

## போரதீவுக் குளத்தில் மனித எச்சங்கள்

போரதீவுக் குளத்தில் காணப்பட்ட மனித எச்சங்களை 26ம் திகதி காவல்துறையினர் வெளியே எடுத்துள்ளனர்.

அம் மனித எச்சங்களைப் பார்வையிட்ட கடந்த மாதம் காணமற் போன ஒருவரின் உறவினர்கள் அவ் எச்சங்கள் அவருடையவையே என அடையாளம் காட்டியுள்ளனர்.

இவ்வாறு கடந்த மாதம் காணாமல் போய் தற்போது மனித எச்சங்களாக மீட்கப்பட்டவர் கோவில்போரதீவு தங்கராசா பேரானந்தம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.



## கப்பக்காரர்கள் கிண்ணியாவில் கைது

கிண்ணியாவில் கப்பம் வசூலிக்கும் முயற்சியில் ஈடுபட்ட கும்பலொன்றைக் காவல்துறையின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

கண்ணியாவில் ஜமாஆதே இஸலாமிய நிறுவனமொன்றின் தலைவரொருவரை தொலைபேசி மூலம் மிரட்டிப் பணம் பறிக்க முயற்சி மேற்கொண்டவர்களே கைதாகினர்.

கிண்ணியாவில் ஜமாஆதே திருகோணமலை பிராந்திய தலைவராக கடமையாற்றும் ஐயூப் முகம் நிஜாம் ஆசிரியரை மிரட்டி 20 இலட்சம் ரூபா பணத்தைக் கொண்டு வருமாறு இவ் இளைஞர்கள் தொலைபேசி மூலம் மிரட்டி வந்துள்ளனர். தொடர்ந்து பேசிப் பேசி கப்பத் தொகை 2 லட்சமாக குறைக்கப்பட்டது.

அத் தொகையினைத் தருவதாக ஒப்புக்கொண்ட ஆசிரியர் விடயத்தைக் கிண்ணியா காவல்துறைக்கு முறைப்பாடு செய்துவிட்டு கிண்ணியா சூரங்கல் பகுதியில் குறிப்பிட்ட இடத்தில் பணத்தை வைத்து விட்டு வந்து விட்டார்.

அதனை எடுத்துச் செல்வதற்காக வந்த இளைஞர்கள் மூவரை கிண்ணியா காவல்துறையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

விசாரணைகள் தொடர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் மரணத்தில் சந்தேகம்!

**தனது** மனைவியின் மரணத்தில் சந்தேகங் கொண்ட கணவனின் அயராத முயற்சி வெற்றியளித்துள்ளது.

புதைக்கப்பட்ட அம்மனைவியின் சடலத்தைத் தோண்டியெடுத்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் வழக்கொன்றை காவல்துறையினர் தாக்கல் செய்யும் படியான உத்தரவை அக் கணவர் ஒன்பது மாதங்களின் பின் காவல்துறை மா அதிபரிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி வயிற்று வலியினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மட்டக்களப்பு கல்லடித்தெருவைச் சேர்ந்த 42 வயதான ஜேசுதாசன் கோல்டன் பென்சமின் சாந்தி மரணமடைந்தார். இப்பெண்ணின் சடலம் கல்லியன்காடு மயானத்தில் 19.09.2012 அன்று அடக்கம் செய்யப்பட்டது.

இப்பெண்ணின் மரணம் தொடர்பில் இவருடைய கணவர் ஜேசுதாஸ் கோல்டன் பென்சமின் காவல் மா அதிபருக்கு அனுப்பிய முறைப்பாட்டு கடிதத்தினையடுத்து மட்டக்களப்பு பிரதி காவல் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் மட்டக்களப்பு தலைமையகக் காவல்துறையினர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தனர்.

இதனை விசாரணை செய்த மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் என்.எம்.அப்துல்லா இப்பெண்ணின் சடலத்தை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார். நீதிபதியின் உத்தரவுக்கமைவாக சடலம் 23ம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் நீதவானின் முன்னிலையில் தோண்டப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிகளான வைத்தியர் எம்.குணதிலக, மற்றும் வைத்தியர் எம்.ஏ.அப்துர் றஹ்மான், மற்றும் உதவி காவல்துறை அத்தியட்சகர் அனுரத்த ஹக்மன பண்டார, மற்றும் மட்டக்களப்பு தலைமையக காவல்துறை நிலையத்தின் சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.சாந்தகுமார் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

இந்த பெண்ணின் சடலத்தைத் தோண்டும்போது அவரின் கணவர் ஜேசுதாஸ் கோல்டன் பென்சமின் மற்றும் அவரின் குடும்பத்தினரும் அங்கு சமூகமளித்திருந்தனர். தோண்டியெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் அம்பாறை வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

குறித்த பெண் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி வயிற்று வலியினால் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு செப்டெம்பர் 17ஆம் திகதி மரணமடைந்த போது இப்பெண்ணின் மரணம் தொடர்பில் இவரது கணவர் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் இரண்டு மகப்பேற்று வைத்தியர்களுக் கெதிராக முறைப்பாடு செய்திருந்தார்.

அதனைத் தொடர்ந்தே புதைக்கப்பட்ட சடலத்தைத் தோண்டி எடுத்து ஆய்வு செய்யும் அனுமதி கிடைத்தள்ளது.



## பேய்க்குக் கழிப்புச் செய்தவர் பிணமாக மீட்பு

**தனது** வீட்டிற்குப் பேய் பிடித்திருப்பதாகக் கூறி கழிப்புக்களைச் செய்த ஒருவர் மறு நாட்காலை அவ்வீட்டிலிருந்து பிணமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக உண்ணாமலும் உறங்காமலும் அவஸ்த்தைப்பட்ட அவரை மனநல மருத்துவ சிகிச்சைகளுக்கு உட்படுமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியிருந்தனர்.

எனினும் அவ் ஆலோசனைகளைத் தட்டிக்கழித்த அவர் தனது வீட்டிற்குப் பேய் பிடித்திருப்பதாக நினைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முழுவதும் கழிப்பு வேலைகளைச் செய்துள்ளார்.

ஆனால் மறு நாட்காலையில் அவரது சடலமே வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. களுவண்கேணி சிங்காரத்தோப்பு வீதியைச் சேர்ந்த விமலநாதனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## மட்டக்களப்பில் 3 குடிநீர்த் திட்டங்கள் ஆரம்பமாகின



மட்டக்களப்பு மாவட்டத்தில் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 45 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று குடி நீர் விநியோகத்திட்டங்களை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் அப் பிரதேச மக்களிடம் கையளித்தார்.

அப்போது முன்னால் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனும் கலந்து கொண்டார்.

## மரண விசாரணைப் பயணச் செலவு ரூபா 30,000க்கு மேல்

வெருகல் மற்றும் சேருவிலை மக்கள் மரண விசாரணைக்கான போக்குவரத்துச் செலவாக மட்டும் ரூபா 30,000ற்கும் மேல் செலவு செய்ய வேண்டியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பிரதேசங்களில் மரணவிசாரணைக்கான வசதிகள் இன்மையால் திடீர் மரணங்கள் நிகழும் போது பிரேத பரிசோதனைக்காக சடலங்களைக் கொண்டு செல்வதற்காக எழும் செலவு மட்டும் ரூபா 30,000த்தைத் தாண்டிவிடுகின்றது.

பிரேதம் ஒன்று கந்தளாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டுமாயின் சுமார் 55 கிலோமீற்றர்களையோ அல்லது திருகோணமலை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டுமாயின் சுமார் 65 கிலோமீற்றர்களையோ பயணிக்க வேண்டும் என்பதால் இவ்வளவு தொகைச் செலவினைத் தாம் கோருவதாக அமரர் ஊர்தி ஓட்டுனர்கள் தெரிவித்துள்ளனர்.

"ஏழை எளிய மக்களான எங்களுக்கு இவ்வளவு தொகைப் பணத்தை மரண விசாரணைக்குப் போக்குவரத்துச் செலவாக செலுத்த இயலுமா?" எனக் கேள்வி எழுப்பியுள்ள மக்கள் இப்பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகளில் யாதாயினும் ஒன்றிலாவது பிரேத பரிசோதனைக்கான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

தற்போதைய மக்கள் கணிப்பீட்டின் படி வெருகல் பிரதேசத்தில் சுமார் 30,000 மக்களும் சேருவிலைப் பிரதேசத்தில் சுமார் 12,500 மக்களும் வசிப்பதாகத் தெரியக் கிடைக்கின்றது.

மட்டக்களப்புச் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
maddunews.com

மலைமுரசு
MALAIMURASU
பத்திரிகைக்கு மாணவப் பத்திரிகையாளர்கள் தேவை
பகுதிநேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ செய்தியாளர் ஆகலாம்
மூன்று மாதப் பயிற்சியின் பின் கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் தரகினை உழைக்க முடியும்
தொடர்பு. - இல 159A, இரண்டாம் மாடி, திருகோணமலை
0777 555 738 075 42 52 042

## உயர்தர மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு

தி/ கலைமகள் மகா வித்தியாலத்தில் 2013ம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பிரியா விடை வைபவம் எதிர்வரும் 29.07.2013 அன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ந.விஜேந்திரன் கலந்து சிறப்பிக்க உள்ளதாக அதிபர் திரு.க.ரவிதாஸ் தெரிவித்தார்.

2012ம் ஆண்டு முதல் தடவையாக உயர்தரக் கலைப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய இரு மாணவிகள் பல்கலைக்கழகம் செல்ல அனுமதி பெற்றுள்ளார்கள். இம்முறையும் அதிகளவு மாணவர்கள் தெரிவாக வேண்டும் என மலைமுரசு வாழ்த்துகிறது.

Daily Activ Cup Cricket Tournament 2013
மாபெரும் Six a Side கிரிக்கட் சுற்றுப்போட்டி
திருமலை மக்கெய்சர் திறந்த மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
ஆகஸ்ட் 17, 18 ம் திகதிகளில்
அணிக்கான கட்டணம். Rs. 500/= மட்டும்.
Contact :
Faiz : 0778121133 or
Amjad : 0712828488
Champion - Activ Cup & 10,000/= + Jersey
1st Runner Up - Cup & 5,000/= + Jersey
Man Of the Series - Cup
Man Of the Match - Cup
E-Mail : activcuptco@gmail.com
Like Us On Face book : "eastnewsalert" or "getfastalert"
Register Now
விண்ணப்ப முடிவுத்திகதி 2013-08-13
Organizer
Main Sponsor
Trincomalee District Team
News Partner
மலைமுரசு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org